வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු


மாருதி Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria றியா பணப்பரிமாற்றம்
Western Union வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 03.07.2023 திங்கட்கிழமை | இதழ் : 206 | பக்கங்கள் : 16

## பிரபாகரன் மரணம், மரபணு பரிசோதனை

# எனக்கு எதுவும் தெரியாது...!

## மைத்திரிபால சிறிசேன



யாழ்ப்பாணம், ஜூலை 03
விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனின் மரணம், மரபணு பரிசோதனை தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. நான் இறுதிப் போர் காலத்தில் சில வாரங்கள் மட்டுமே பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தேன் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

15

## 190 மருந்துகளுக்கு தட்டுப்பாடு

### சுகாதார அமைச்சர்

கொழும்பு, ஜூலை 03
சுகாதார அமைச்சின் மத்திய ஔடத களஞ்சியத்தில் 800 மருந்துகளில் 190 மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தை குறிப்பிட் டுள்ளார்.

எனினும், மருத்துவ மனைகளில் 90க்கும் குறைந்த மருந்துகளுக்கே தட்டுப் பாடு நிலவுகிறது. ஔடத தரவு கட்டமைப்பில் சில மேம்படுத்தல்கள் பணிகளை, முன்னெடுக்க வேண்டியுள் ளது.

எனவே, அது தொடர்பில் சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.




### தமிழர் பூர்வீக நிலமான

## கச்சல் சமணங்குளத்தில் புதிய விகாரை திறப்பு!

வவுனியா, ஜூலை 03
வவுனியா வடக்கில் தமிழர்களின் பூர்வீகக் கிராமமான கச்சல் சமணங்குளத்தில் நிர்மாணிக்கப்பட்ட புதிய விகாரை நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

தொல்பொருள் பகுதி என்ற பெயரில் தொல்பொருள் திணைக்களத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் இந்த விகாரையின் நிர்மாணப்பணிகள் இடம்பெற்று வந்தன.

போர் காரணமாக 1980களில் இந்தப் பகுதியிலிருந்து தமிழ் மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர். போர் முடிந்த பின்னர் அங்கு தமிழ் மக்கள் குடியேற முனைந்தபோது தொல்பொருள் அடையாளம் என்று கூறி அவர்களை அங்கு குடியேற அனுமதிக்கவில்லை.

இந்த நிலையிலேயே கச்சல் சமணங் குளத்தில் விகாரை கட்டப்பட்டு நேற்று திறந்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தமிழ்த் தேசியக் கட்சிகள் இந்திய பிரதமருக்கு கடிதம்

### இந்த வாரத்துக்குள் இறுதியாகும்

யாழ்ப்பாணம்,ஜூலை 03
இலங்கை அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தி இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு கடிதம் ஒன்றை இந்த வார இறுதிக்குள் அனுப்புவதற்கு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இலங்கை தமிழரசு கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி உள்ளிட்ட தரப்புகளுடனும் கூட்டிணைந்து

15



வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் தேரில் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்காட்சி அளித்த வேளை...

## நயினை நாகபூசணி அம்மன் தேர் திருவிழா சிறப்புற நடந்தது

யாழ்ப்பாணம், ஜூலை 03
வரலாற்று சிறப்பு மிக்க யாழ் நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தின் தேர்த் திருவிழா நேற்று பக்தி பூர்வமாக நடைபெற்றது.

நயினை நாகபூசணி அம்மனுக்கும் விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை விசேட அபிசேகம் இடம்பெற்று வசந்த மண்டப பூசை நடைபெற்றது.

காலை 8.30 மணிக்கு நாகபூசணி அம்மன் பரிவார தெய்வங்களுடன் தனித்தனி தேர்களில் ஆரோகணித்தார். இந்தத் திருவிழாவில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

## ‘13’ தமிழர்களுக்கு தீர்வல்ல இந்தியா வற்புறுத்தக்கூடாது!

### பிரதமர் மோடிக்கு முன்னணியும் கடிதம் அனுப்பத் தயாராகிறது

யாழ்ப்பாணம்,ஜூலை 03
தமிழர் விவகாரத்தில் இந்தியா செயல்பட வேண்டிய விதம் குறித்து தெளிவுபடுத்தி இந்திய பிரதமருக்கு தாமும் கடிதம் ஒன்றை அனுப்பவுள்ளதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில்,

15

## பலாலி - இரத்மலானை விமான சேவை ஆரம்பம்!

கொழும்பு, ஜூலை 03
இரத்மலானையிலிருந்து - யாழ்ப்பாணம் (பலாலி) சர்வதேச விமான நிலையத்துக்கான உள் நாட்டு விமான சேவை நேற்றுமுன்தினம் ஆரம்பமானது

15

## மின்சாரக் கட்டணம் ஜனவரியில் குறையும்

### அமைச்சர் காஞ்சன அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 03
அரசாங்கம் தற்போது மேற்கொண்டுள்ள மின்சார கட்டணக் குறைப்பை விட அதிகமான கட்டணக் குறைப்பை எதிர் வரும் ஜனவரியில் மேற்கொள்ள எதிர்பாரக்கிறோம் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர

15

# கிளிநொச்சி மருத்துவமனையில் ஒரு வாரத்தில் 4 சிசுக்கள் மரணம்

### தாயாரின் கர்ப்பப்பை அகற்றம்

கிளிநொச்சி, ஜூலை 03
கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடந்த ஒரு வாரத்தில் நான்கு சிசு மரணங்கள் இடம்பெற்றுள்ளன. அத்துடன், பிரசவத்தாய் ஒருவரின் கர்ப்பப்பையும் அகற்றப்பட்டுள்ள சம்பவம் பொது மக்களின் மத்தியிலும், சுகாதார ஊழியர்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் எழுத்து மூலம் மாவட்ட மருத்துவமனையின் பணிப்பாளருக்கு முறையிட்டுள்ளனர். அத்துடன், மருத்துவர்களின் அக்கறையின்மை மற்றும் உரிய நேரத்தில் உரிய சிகிச்சைகளை வழங்காது விட்டமையுமே இந்த சம்பவங்களுக்கு காரணம் என்றும்

15

## “கூட்டுறவு திட்டத்தில் இருந்து விலகுவதற்கு அரசு திட்டம்!”

கொழும்பு, ஜூலை 03
கூட்டுறவுத் திட்டத்தில் இருந்து விலகுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் தலையீட்டால் கூட்டுறவு வர்த்தகம் பாதிக்கப்படுமாயின் அரசாங்கம்

15

ஈழநாடு








வரலாற்று பிரசித்தி பெற்ற நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய தேர்த்திருவிழா நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றவேளை...!

# தடை செய்யப்பட்ட பிரமிட் திட்டம் முகநூல் ஊடாக பின்பற்றப்படுகிறது

கொழும்பு, ஜூலை 03

நுவரெலியா, கண்டி, கேகாலை மாவட்டங்களின் பல பகுதிகளில் சட்ட விரோத பிரமிட் முறையிலான நிதி வர்த்தகங்கள் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அரச உத்தியோகத்தர்கள் சிலரும் இதில் ஈடுபட்டுள்ளனர் என்று பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

சுமார் ஒரு இலட்சம் ரூபாய் வரை பணத்தை பெறும் குறித்த ஒரு வலையமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆரம்பத்தில், பயனாளர்களுக்கு பணத்துக்குப் பதிலாக சுமார் 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான தேநீர் கோப்பை தொகுதிகள் அல்லது உணவுத் தட்டுகளை வழங்குகின்றனர். பின்னர் 20 பேரை இணைத்துக் கொண்டு அதன் மூலம் பணத்தைப் பெற்றுக்கொடுத்தால் மாதாந்தம் 50 ஆயிரம் ரூபாய் வங்கிக்கு வைப்பீடு செய்யப்படும் என்றும் கூறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்த வலையமைப்பினரோடு இணைந்து கொள்பவர்களை சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்வது, கவர்ச்சியான ஆடம்பரமான ஆண்/பெண்களை வரவழைத்து பணம் சம்பாதிக்கும் வழிவகைகளை கூறுவது என பலவாறு வலையமைப்பினர் செயல்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது.

மேலும், இந்த வலையமைப்போடு தொடர்புகொள்பவர்கள், தமது உறவினர்கள் மற்றும் நண்பர்களை இதில் இணைத்துக்கொள்வதற்காக அவர்களின் வீடுகளுக்கும் சென்று வலையமைப்பினர் தொல்லை கொடுக்கின்றனர் என்றும் அவர்கள் பல வாகனங்களின் முன்பாக நின்று எடுக்கப்பட்ட படங்களை தமது முகநூல் பக்கத்தில் காட்டி பலரை மூளைச்சலவை செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதில் பிராந்திய கல்வி மற்றும் சுகாதார திணைக்களங்கள், பிரபல கல்லூரிகள், உள்ளூராட்சி மன்றங்கள், பிரதேச செயலகங்கள் போன்றவற்றில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கு பிரதானமாக செயல்படுகின்றனர் என்று கூறப்படுகிறது.

இவர்கள் அரச உத்தியோகத்தர்களாக இருப்பதால் பலரும் நம்பி பணத்தை கொடுத்து ஏமாற்றமடைந்துள்ளதாகவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக பலர் மீது பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# ஜூனில் மாதத்தில் 9,916 டெங்கு நோயாளர்

கொழும்பு, ஜூலை 03

கடந்த ஜூன் மாதத்தில் 9 ஆயிரத்து 916 டெங்கு நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இந்த வருடத்தில் மொத்த மொத்தமாக 49 ஆயிரத்து 326 நோயாளிகள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பிரதானி இந்திக வீரசிங்க தெரிவித்துள்ளார்.

(ஐ)

# பொன்னாலை வரதராஜருக்கு வெள்ளியன்று கும்பாபிஷேகம்!

கொழும்பு, ஜூலை 03

வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜ பெருமாள் ஆலய மகா கும்பாபிஷேக பெருவிழா எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 08.45 மணி முதல் காலை 10.15 மணி வரையுள்ள சுப வேளையில் நடைபெறவுள்ளது.



மகா கும்பாபிஷேக பூர்வாங்கக் கிரியைகள் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி முதல் 6ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை அடியவர்கள் எண்ணெய் காப்புச் சாத்தும் வைபவமும் நடைபெறுமென மேற்படி ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

(ஐ)

# இளம்பெண்களுக்கு வலை; பொலிஸார் விசாரணை!

கொழும்பு, ஜூலை 03

நடிப்பதற்கு வாய்ப்பு தருவதாக கூறி இளம் பெண்களிடம் பண மோசடியில் ஈடுபட்டு வரும் குழுவை தேடி தலங்கமை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த மோசடி குழுவினர் ரிக்ரொக் ஊடாக இளம் பெண்களின் கைபேசி இலக்கங்களைப் பெற்று அவர்களுக்கு குறுஞ் செய்திகளை அனுப்பியுள்ளனர் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்துள்ள வங்கிக் கணக்கு இலக்கங்கள் மற்றும் கைபேசி இலக்கங்களை நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கவும் நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஈழநாடு
Eelanadu
03.07.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், ஆனி 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# வடக்கில் சீனாவின் நில ஆக்கிரமிப்பா?

வவுனியாவில் சீனித் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கான காணி விடுவிப்பு தொடர்பில் அமைச்சரவை அனுமதியளித்துள்ளது. இந்தத் திட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவ கட்சிகளில் ஒன்றான ஜனநாயக போராளிகள் கட்சி தங்களுடைய எதிர்ப்பை வெளியிட்டிருக்கின்றது. குறித்த திட்டத்தின் பின்னால் சீனா இருப்பதாகவும் இவ்வாறான நில ஆக்கிரமிப்புக்கு எதிராக தாம் வீதிகளில் இறங்கி போராடுவோம் என்றும் குறித்த கட்சி அறிவித்திருக்கின்றது.

ஆனால், இதிலுள்ள சிக்கலான விடயம் – குறித்த சீனித் தொழிற்சாலை திட்டத்தை கூட்டமைப்பின் முதன்மையான பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோவே முன்மொழிந்திருக்கின்றது. அத்துடன், இதில் நேரடியாகவும் தொடர்புபட்டிருக்கின்றது. இவ்வாறானதொரு சூழலில் பிறிதொரு பங்காளி கட்சி இதற்கு பின்னால் சீனா இருப்பதாகப் பகிரங்கமாக அறிவித்திருக்கின்றது. இது தொடர்பில் கூட்டமைப்பின் பேச்சாளரோ அல்லது கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களோ அமைதி காக்கின்றனர்.

இந்த விடயங்களை ஆராய்கின்றபோது, குறித்த திட்டம் முன்னர் வடக்கு மாகாண சபையால் நிராகரிக்கப்பட்டிருக்கின்றது. இது தொடர்பான ஆய்வு ஒன்றையும் யாழ். பல்கலைகழகத்தின் விவாசய பீடம் மேற்கொண்டிருக்கின்றது. இதன்படி, சீனித் தொழிற்சாலை இலங்கையில் தோல்வியடைந்த ஒரு திட்டமாக இருப்பதாகவும் இதன் காரணமாகவே சீனித் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன – என்றும் குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன. மேலும் சீனித் தொழிற்சாலைக்காக கரும்புகள் பயிரிடப்படும்போது ஏனைய சிறுதானிய பயிர்ச் செய்கைகளை முன்னெடுக்க முடியாதென்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

இதனை கருத்தில்கொண்டு, அப்போதைய முதலமைச்சர் விக்னேஸ்வரன் இந்தத் திட்டத்தை வடக்கு மாகாணத்தில் மேற்கொள்ள முடியாதென்று அறிவித்திருக்கிறார். இதனைத் தொடர்ந்து குறித்த திட்டம் கைவிடப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில், மாகாண சபைக்கான தேர்தல் திட்டமிட்டுப் பிற்போடப்பட்டுவரும் சூழலில் ஆளுநரின் நிர்வாகத்தின் கீழ் மீண்டும் இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கான முயற்சிகள் தீவிரமடைந்திருக்கின்றன. இதற்கான முதலீட்டை தாய்லாந்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நிறுவனம் ஒன்றே செய்யப்போவதாகவும் குறிப்பிடப்படுகின்றது. ஆனால், ஜனநாயக போராளிகள் கட்சியோ இதற்கு பின்னால் சீனாவின் முதலீடு இருப்பதாகக் குறிப்பிடுகின்றது.

சீனா அண்மைக்காலமாக வடக்கு - கிழக்கில் ஆர்வம் காண்பித்து வருவது இரகசியமான விடயமல்ல. சீனத் தூதுவர் மன்னார் உட்பட வடக்கின் பல பகுதிகளில் நிலைமைகளை ஆராய்ந்திருந்தார். மன்னாரில் நின்றுகொண்டு இந்தியாவுக்கும் மன்னாருக்கும் எவ்வளவு தூரமென்றும் கேட்டிருந்தார். இவ்வாறானதொரு பின்புலத்தில் ஜனநாயக போராளிகள் கட்சியின் குற்றச்சாட்டுகளை இலகுவில் நிராகரிக்க முடியுமா?

சீனா இந்தத் திட்டத்துக்குப் பின்னால் இருக்கின்றதா அல்லது இல்லையா என்பதற்கு அப்பால் வடக்கு மாகாண சபையால் பொருத்தமற்றதென்று நிராகரிக்கப்பட்ட திட்டமொன்றை மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் - ஆளுநரின் நிர்வாகத்தின் கீழ் மேற்கொள்வதானது மாகாண சபையின் முக்கியத்துவத்தை தமிழர்களே தரம் குறைப்பதாகவே நோக்கப்படும். மாகாண சபை தேர்தல் நடைபெற்ற பின்னர் இந்தத் திட்டம் தொடர்பில் மாகாண சபையின் அனுமதியுடன் ஆராயப்படுவதே சரியானதாக அமையும்.

இந்த விடயத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளின் தலைவர்கள் கூட்டுத் தீர்மானங்களை முன்னெடுக்க வேண்டும். இவ்வாறான செயல்பாடுகள், கூட்டமைப்பையும் - அதேவேளை, மாகாண சபையின் அவசியத்தையும் கேள்விக்கு உள்ளாக்கக்கூடியது. மாகாண சபை தேர்தலை நடத்துமாறும் 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துமாறும் இந்தியாவிடம் கேட்டுக்கொண்டு மாகாண சபையின் தீர்மானத்துக்கு மாறான ஒரு திட்டத்தில் தமிழ் கட்சிகளே முரண்பட்டு முட்டி மோதுவதானது சரியான விடயமல்ல. சம்பந்தப்பட்டவர்கள் இது தொடர்பான சந்தேகங்களுக்கு பதிலளிக்க வேண்டும்.

*நயினை அம்மன் ஆலய தேர்:*

# போக்குவரத்து வசதி குறைபாட்டால் ஆயிரக்கணக்கான மக்கள் சிரமம்!

*யாழ்ப்பாணம், ஜுலை 03*

*போக்குவரத்து வசதிகள் சீரின்மையால் நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத் தேர்த் திருவிழாவுக்கு சென்ற மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.*

*வரலாற்று பிரசித்திபெற்ற நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலய பெருந்திருவிழா கடந்த ஜுன் 19ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது. நேற்றைய தினம் தேர்த் திரு விழா நடைபெற்றது.*

*அதிகாலை முதல் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களில் இருந்தும் மக்கள் ஆலயத்துக்கு செல்வதற்காக குறிகாட்டுவான் துறைமுகத்தில் கூடினர்.*

*குறிகாட்டுவான் இறங்கு துறையில் போதியளவில் இல்லாததால் நீண்டவரிசையில் மக்கள் காத்திருந்தனர். இதனால், அவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.*

# மருந்துகளால் பாதிக்கப்பட்டோருக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு பணிப்புரை

## *சுகாதார அமைச்சர் கெஹலிய விடுத்தார்*

*கொழும்பு, ஜுலை 03*



*நுவரெலியா மருத்துவமனையில் கண் சத்திர சிகிச்சை மேற்கொண்டு ஒவ்வாமையால் பாதிக்கப்பட்ட 11 பேர் குணமடைந்துள்ளனர். இருவர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப் பணிப்புரை விடுத்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.*

*இந்திய நிறுவனத்திடம் கொள்வனவு செய்யப்பட்ட மருந்தின் மூலமே அவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டது என்றும் அந்த மருந்து தற்போது பாவனையில் இருந்து இடைநிறுத்தப்பட் டுள்ளது எனவும் அமைச்சர் தெரிவித்தார்.*

*ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.*

*பேராதனை சிறுவர் மருத்துவமனையில் இரு சிறுவர்கள் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் எனக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில், அவர்களுக்கு மயக்க மருந்து வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்ச்சைக்குரிய குறித்த மயக்க மருந்து எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சிறுவர்களுக்கு பயன்படுத்தப்பட மாட்டாது என்றும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.*

*இது குறித்த முதலாவது அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எனினும், அதிலுள்ள தகவல்களை இப்போது ஊடகங்களுக்கு வெளியிட முடியாது. இறுதி அறிக்கை கிடைக்கப் பெற்றதன் பின்னர் முழுமையான தகவல்கள் வழங்கப்படும். எவ்வாறிருப்பினும் குறித்த மருந்து உட்பட சந்தேகத்துக்குரிய ஏனைய சில மருந்துகளின் பாவனைகளும் இடைநிறுத்தப்பட்டு, அவை பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இந்தியா மற்றும் அவுஸ்திரேலியாவின் மருந்துகள் இவற்றில் உள்ளடங்குகின்றன.*


*பேராதனை சிறுவர் மருத்துவமனையில் பதிவான இரு மரணங்களிலும், சுகாதார தரப்பில் ஏதேனும் தவறு இழைக்கப்பட்டிருந்தால் அந்த பொறுப்பிலிருந்து எம்மால் விலக முடியாது. மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு விலைமனு கோரப்படும். அவ்வாறு விலைமனு கோரப்படும் போது பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் முன்வராத சந்தர்ப்பத்திலேயே, பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் ஊடாக மருந்தை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.*

*மாறாக நாம் திட்டமிட்டு பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் ஊடாக மருந்துகளை இறக்குமதி செய்வதில்லை. நுவரெலியா மருத்துவமனையில் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டவர் களில் 13 பேருக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது. இவர்களில் 11 பேர் குணமடைந்துள்ளனர். எனினும், எஞ்சிய இருவர் எதிர்கொண்டுள்ள பாதிப்புகள் அதிகமாகும்.*

*இவர்களுக்கு வலி நிவாரணியாக பயன்படுத்தப்பட்ட சொட்டு மருந்தில் காணப்பட்ட பற்றீரியா காரணமாகவே ஒவ்வாமை ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இந்த மருந்து இலங்கையில் பதிவு செய்யப்பட்ட இந்திய நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்டதாகும். இந்த நிறுவனம் இலங்கைக்கு கடந்த 7 ஆண்டுகளுக்கு மருந்துகளை இறக்குமதி செய்கிறது.*

*இலங்கைக்கு மாத்திரமின்றி 53 நாடுகளுக்கு இந்நிறுவனம் மருந்துகளை ஏற்றுமதி செய்கிறது. அவ்வாறிருந்தும் இவ்வாறானதொரு துரதிர்ஷ்டவசமான நிலைமை ஏற்பட்டுள்ளது. எனவே இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிச்சயம் நஷ்ட ஈடு வழங்கப்படும் - என்றார்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



ஜூலை - 03 திங்கட்கிழமை
சோபகிருது வருடம் - ஆனி 18
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : பவுர்ணமி




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சுக்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் பாக்கிகள் வசூலாவதில் தாமதம் ஏற்படும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**இடபம்**
மறைந்து கிடந்த திறமைகள் வெளிப்படும். மின்னணு மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். வாகனம் சிறுசிறு தொந்தரவு தரும். வியாபாரம் சூடு பிடிக்கும். புது சலுகைகள் கிடைக்கும்.

**மிதுனம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்கு பாராட்டு கிடைக்கும். அமோகமான நாள்.

**கடகம்**
மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவீர்கள். புதிய அதிகாரி வழி வந்தவர்கள் நன்மை செய்து முன்னேற்றத்திற்கு வழி செய்வார்கள்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். புது வேலை கிடைக்கும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். சகஊழியர்களால் நிம்மதி கிடைக்கும். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும்.

**கன்னி**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மனதிற்கு இதமான செய்தி வரும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு. உங்கள் திறமையை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும்.

**துலாம்**
கணவன் - மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். வியாபாரத்தில் திடீர் இலாபம் உண்டு. சக ஊழியர்கள் மதிப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**விருட்சிகம்**
இராசிக்குள் சந்திரன் இருப்பதால் வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் புதிய அதிகாரிகளிடம் உரிமை எடுத்துக்க வேண்டாம்.

**தனுசு**
கணவன் - மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். யாரையும் தாக்கி எறிந்து பேசாதீர்கள். சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டிய நாள்.

**மகரம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். வீடு மனை வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். உயர் அதிகாரி பாராட்டும்படி நடந்துக் கொள்வீர்கள்.

**கும்பம்**
கடந்த கால சுகமான அனுபவங்கள் மனதில் நிழலாடும்.எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். மரியாதைகூடும். மதிப்பு மரியாதை அதிகரிக்கும் நாள்.

**மீனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

# பழனிசாமியுடன் மீண்டும் இணைய வாய்ப்பில்லை!

## பன்னீர்செல்வம் தெரிவிப்பு

சென்னை, ஜூலை 03

பழனிசாமியோடு மீண்டும் இணைய வாய்ப்பில்லை அ. தி. மு. கவை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது என்று முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தனது அணியினரை நேற்று சந்தித்து நடத்திய கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"அரசாங்கம் கவிழும் சூழலில் நல்லெண்ண அடிப்படையில் பழனிசாமியுடன் ஒன்றிணைந்தோம். ஆனால், அந்த நன்றி இல்லாமல் அவர்கள் படுத்தியபாடு வார்த்தைகளால் விவரிக்க முடியாது. ஆட்சி இல்லாவிட்டாலும் அதிகாரம் இல்லாவிட்டாலும் மனத் தைரியம் உள்ளது. அதற்கு திருச்சி மாநாடே சான்று.

அடுத்த மாநாடு கொங்கு மண்டலத்தில் நடைபெறவுள்ளது. விரைவில் திகதி அறிவிக்கப்படும். கூட்டணியைப் பொறுத்தவரை எங்களிடமும் பா. ஜ. க. தலைவர்கள் பேசி வருகின்றனர். தேர்தலின்போது கூட்டணி அறிவிப்பை வெளியிடுவோம்.

கடந்த காலத்தில் பழனிசாமி அரசாங்கத்தை காப்பாற்றினோம். அதற்குரிய செயல் அவரிடம் இல்லை. இனிமேலும் அந்தத் தவறை செய்யமாட்டோம். அ. ம. மு. கவுடன் தோழமை உணர்வுடன் இணைந்திருக்கிறோம். நாங்கள் தி. மு. கவின் பி அணி அல்ல. ஏ முதல் இசற் அணி வரை பழனிசாமிதான். அவர் எவ்வளவு நெருக்கமாக இருக்கிறார் என்பது அனைவருக்கும் தெரியும் - என்றார். (ஐ)

# சனாதனம் பாரதத்தை பிரிக்கவே முடியாது!

## ஆளுநர் ரவி

சென்னை, ஜூலை03

பாரதத்தையும், சனாதன தர்மத்தையும் பிரிக்க முடியாது என்று ஆளுநர் ஆர். என். ரவி தெரிவித்துள்ளார்.

சென்னை - திருவல்லிக்கேணி ராகவேந்திரா சுவாமி மடத்தின் பொன் விழா நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், தமிழகம் ஒரு புண்ணிய பூமியாகும். பல ரிஷிகளும் முனிவர்கள் வாழ்ந்த பூமி இது. அதேபோல் சனாதன தர்மம்தான் இந்த பாரதத்தை உருவாக்கியது. பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வேதப்புரட்சி ஏற்பட்டபோது சனாதன தர்மம் பரவத் தொடங்கியிருக்கிறது. அந்தவகையில் பாரதம் என்று சனாதன தர்ம இலக்கியங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியாவுக்குதான் அறிமுகம் தேவைப்படுகிறது. ஆனால் பாரதத்துக்கு தேவையில்லை. இந்தியா என்ற பெயரை ஆங்கிலேயர்கள்தான் வழங்கினர். ஆயிரம் ஆண்டுகளாக அந்நியர் படையெடுப்பு, ஆட்சி என்று இருந்ததால், இந்தியா என்பது 1947இல் பிறந்ததாக அனைவரும் எண்ணுகின்றனர். ஆனால், அது உண்மை அல்ல.

இந்தியா என்னும் பாரதம் 10 ஆயிரம் ஆண்டுகள் பழமையான கலாசாரத்தை உடையது. இது இந்தியாவை தவிர வேறு எந்த நாட்டுக்கும் பொருந்தாது. இந்திய அரசமைப்பில் முதல் வரைபடமாக குருகுலம்தான் இருந்தது. அதுவே நம் சமுதாயத்தின் தொடக்கமாகும். அதேபோல் சனாதன தர்மம் அனைவரையும் உள்ளடக்கியது.

சனாதன தர்மம் என்பது பாகுபாடு பார்ப்பது, சமூக நீதிக்கு எதிரானது என்று யாராவது கூறினால், அதுமுற்றிலும் உண்மைக்கு புறம்பானது. இந்தியா, தமிழ்நாடு, சென்னை ஆகியவை சனாதன தர்மத்தால்தான் உயிர்ப்புடன் உள்ளன. பாரதத்தையும், சனாதன தர்மத்தையும் பிரிக்கவே முடியாது. சனாதன தர்மம் இல்லையென்றால், பாரதமும் இல்லையென்று கூற வேண்டும். பாரதம் இருந்தால் சனாதன தர்மமும் இருக்கும் - என்றார். (ஐ)

# "இந்தியாவிலேயே அதிக கல்வெட்டுகள் தமிழ்நாட்டிலேயே கண்டெடுக்கப்பட்டது"

சென்னை, ஜூலை 03

இந்தியாவிலேயே அதிகளவில் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டது தமிழகத்தில் தான் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வட அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவை மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக ஆற்றிய உரையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சிவகளை வாழ்விட பகுதியில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை ஆய்வு செய்தபோது அங்கே செங்கல் வடிகாலில் தண்ணீர் சென்றுள்ளது. கீடியில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை ஆய்வு செய்தபோது அங்கே நெல் மணிகள் பயிரிடப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன.

தாமிரபரணி ஆற்றங்கரை நாகரிகம் 3,200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது அறிவியல் பூர்வ ஆய்வில் உறுதி செய்யப்பட்டது. பார் முழுவதும் சென்று கொடி நாட்டிய தமிழரின் சிறப்பை காண வருகை தர வேண்டும். தொன்மைத் தமிழரின் பெருமை என்ற தலைப்பில் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் மொழி எப்போதும், எல்லோரையும் வாழவைக்கும். மொழியின் பெயரை பெயராக வைப்பதில் தமிழர்கள் முன்னோடி. தமிழ் மொழி என்பது நம்மைப் பொறுத்தவரை எழுத்தாக இல்லாமல் இரத்தமாக உள்ளது. அதனால்தான் நாம் தமிழ் என்றால் உணர்ச்சிவசப்படுகிறோம். கடல் கடந்து வந்த பிறகும் தமிழ் மொழிக்காக விழா எடுக்கிறார்கள் தமிழர்கள் - என்றார். (ஐ)

# சிதம்பரத்தில் பா. ஜ. க. போராட்டம்; 140 பேர் பொலிஸாரால் கைதாகினர்

கடலூர், ஜூலை 03

சிதம்பரம் நடராஜர் கோயில் கனகசபைமீது ஏறி வழிபட்ட, இந்து அறநிலையத் துறையை கண்டித்து, தீட்சிதர்களுக்கு ஆதரவாக சிதம்பரத்தில் பொலிஸாரின் தடையை மீறி பா. ஜ. கவினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதில் 12 பெண்கள் உள்ளிட்ட 140 பேரை பொலிஸார் கைது செய்தனர்.

ஆனி திருமஞ்சன நிகழ்வையொட்டி, சிதம்பரம் நடராஜர் கோயில் கனகசபையில் ஏறி வழிபட 4 நாட்களுக்கு கோயில் நிர்வாகத்தினரால் தடை விதிக்கப்பட்டிருந்தது. அரசின் முந்தைய உத்தரவுக்கு எதிராக இது இருப்பதாக பக்தர்களிடையே எதிர்ப்பு கிளம்பியது. இதற்கிடையே இந்த தடையை மீறி இந்து அறநிலையத் துறையினர் கனக சபையில் ஏறி வழிபாடு நடத்தினர்.

இதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்த சிதம்பரம் நகர பொலஸாரிடம் அனுமதி கோரப்பட்டது. எனினும், அனுமதி வழங்கப்படவில்லை. இந்நிலையில், போராட்டத்தை நடத்திய பா. ஜ. கவினரை பொலிஸார் கைது செய்தனர். (ஐ)





யாழ்ப்பாணம் - வண்ணை வீரமாகாளி அம்மன் கோவில் தேர்த் திருவிழா நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை பக்தி பூர்வமாக நடைபெற்றது. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

# இலங்கை தமிழர்களின் தாயகமல்ல; விகாரைகளின்மேலேயே கோயில்கள்

## எல்லாவல மேதானந்த தேரர் சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 03

தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் இலங்கை தமிழர்களின் பண்டைய தாயக மல்ல. அப்படி யாராவது சொன்னால் அவர்களுக்கு பதிலளிக்க நான் தயார். வடக்கு - கிழக்கில் கட்டப்பட்டுள்ள பழைய கோயில்கள் புராதன விகாரைகளின் மேலேயே கட்டப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார் எல்லாவல மேதானந்த தேரர்.

"யாழ்ப்பாணம் கந்தரோடையில் மட்டும் 50 ஸ்தூபிகள் கண்டுபிடிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. விகாரை தளத்தில் காணப்படும் கல்வெட்டுகளில், அதனை நாக விகாரை என குறிப்பிடுகிறது. வடக்கில் எடுக்கப்பட்ட கல்வெட்டுக்க



ளின் மூலம், கடந்த காலங்களில் அங்கு சிங்கள குடியேற்றங்கள் இருந்தன என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

பொலநறுவை இராசதானியை ஆண்ட முதலாம் மகா பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்தில் ஊர்காவற்றுறை துறைமுகத்தின் ஊடாக இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையில் சரக்கு வர்த்தகம் நடந்தது கல்வெட்டுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

தென்னிந்தியாவுடனான வர்த்தக நடவடிக்கை காரணமாக துறைமுக விதிகள் குறித்து தமிழில் கல்வெட்டு எழுதப்பட்டது. அந்த கல்வெட்டு தற்போது நாகபூசணி அம்மன் கோயிலில் உள்ளது. தொல்லியல் திணைக்களத்துக்கு இது பற்றி பல தடவைகள் தெரிவித்தும் பலனில்லை. கல்வெட்டின் இறுதியில் சமஸ்கிருதத்தில் 'மஹா பராக்கிரமபாகு சகல சிங்களச் சக்கரவர்த்தி' என்றும் எழுதப்பட்டிருக்கிறது. அந்த வார்த்தைகளைக் கேட்டதும் நாங்கள் வியந்து போனோம். தொல்லியல் சான்றுகளின் அடிப்படையில் இலங்கையில் தமிழர் தாயகம் இல்லை.

அப்படி நிரூபிக்க யாரேனும் இருந்தால் நான் பதில் சொல்ல தயார். மேலும், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள பெரும்பாலான பழைய கோயில்கள் பண்டைய பௌத்த தலங்களில் கட்டப்பட்டுள்ளன. வவுனியா, மட்டக்களப்பு, முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாறை உள்ளிட்ட பல பிரதேசங்களில் கோயில் கட்டப்பட்டிருந்தால் அது பழமையான பௌத்த விகாரை யாகும். இது என் கண்ணால் பார்த்த ஒன்று.

சில பண்டைய பௌத்த புனித ஸ்தலங்களிலிருந்து கலைப்பொருட்களை வேறு இடங்களுக்கு நகர்த்தி கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. மட்டக்களப்பு தாந்தாமலை பௌத்த தளத்தில் கோயில் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. புளுகுணாவ புத்த விகாரையில் இருந்து ஒரு கல் இருக்கை அந்த கோவிலுக்கு கொண்டு வரப்பட்டது. முல்லைத்தீவு குருந்தூர்மலை பௌத்த விகாரைக்கு ஆறு முறை சென்றிருக்கிறேன். 1964 இல் முதன்முதலில் இந்த இடத்திற்குச் சென்றேன். அந்தப் பகுதியில் ஒரே ஒரு தமிழன் வாழ்ந்தான். குருந்தூர் மலை இடிபாடுகளை நமக்குக் காட்டியவர் ஒரு சிறு குடிசையில் வாழ்ந்தவர்.

குருந்தூர்மலை தொல்லியல் தளத்துக்கு முதல்முறை சென்றபோது, ஒரு கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் கல்வெட்டு அழிக்கப்பட்டது. குருந்தூர் மலை விகாரையின் தண்ணீர் பிரச்னையை தீர்க்க மூன்றாம் மிஹிந்து மன்னர் வந்ததாக அந்த கல்வெட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் கல்வெட்டில் அந்தப் பகுதி குறுங்காமம் என்று அழைக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்த கிராமத்தில் ஒரு சிறிய ஏரி உருவாக்கப்பட்டது. கல்வெட்டின் படி ஏரியின் பெயர் குருந்த வாபி. அந்த ஏரி தற்போது தண்ணிமுறுப்பு ஏரி என அழைக்கப்படுகிறது. பின்னர் தமிழ் கிராமங்கள் தோன்றியதன் மூலம் மக்கள் தண்ணிமுறிப்பு ஏரியில் தண்ணீர் எடுத்து விவசாயம் செய்துள்ளனர். ஆனால், அவர்கள் பௌத்த புனித தளத்துக்கு உரிமை கோர வரவில்லை. இடிபாடுகள் சேதமடையவில்லை. சமீபகாலமாகத்தான் உரிமை கோரத் தொடங்கியுள்ளனர். சாதாரண தமிழ் மக்கள் உரிமை கோரவில்லை. தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் அவர்களின் அடியாட்கள். வாக்குகளைப் பெறுவதற்காக நடத்தப்படும் அரசியல் நாடகங்கள் அவை - என்றார்.

(ஐ)

# இஸ்ரேல் - இலங்கை இடையே நேரடி பயணிகள் விமானசேவை

கொழும்பு, ஜூலை 03

இஸ்ரேலுக்கும் இலங்கைக்கும் இடையிலான நேரடி பயணிகள் விமான சேவை எதிர்வரும் ஒக்ரோபர் முதல் ஆரம்பிக்கப்படும் என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் அண்மையில் விட யத்துக்கு பொறுப்பான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலை மையில் இரண்டு நாடுகளின் சிவில் விமான சேவை அதிகாரிகளின் பங்கு பற்றலுடன் இடம்பெற்றது.

இதன்படி, இஸ்ரேலின் டெல் அவிவில் இருந்து கட்டுநாயக்க வரை நேரடி பயணிகள் விமான சேவைகள் முதன்முறையாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

இஸ்ரேலின் அகியா விமான சேவைக்கு சொந்தமான விமானங்கள் இலங்கைக்கான இந்த சேவைகளை முன்னெடுக்கவுள்ளது.

அது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மரண சடங்கில் பங்கேற்ற சட்டத்தரணி உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 03

மரண வீட்டுக்கு சென்றிருந்த பிரபல சட்டத்தரணி ஒருவர் மயங்கி விழுந்து இறந்த சம்பவம் பண்டாரவளையில் இடம்பெற்றுள்ளது.

பண்டாவளை நகரின் பிரபல வர்த்தகர் ஒருவரின் இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், மருதானையை சேர்ந்த பிரபல சட்டத்தரணியான பிரியந்த பாலசிங்க பங்கேற்றிருந்தார்.

அவரை உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதிலும், மாரடைப்பு காரணமாக அவர் உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# சேதன உரக் கொள்வனவுக்கு வழங்கிய 62 இலட்சம் டொலரை மீளப்பெற பேச்சு!

கொழும்பு, ஜூலை 03

சேதன உரத்தை கொள்வனவு செய்வதற்காக செலுத்திய 62 இலட்சம் அமெரிக்க டொலர்களை மீளப்பெறுவதற்கு சீன அரசாங்கத்துடன் இலங்கை வெளிவிவகார அமைச்சு மீண்டும் பேச்சுகளை ஆரம்பித்துள்ளது.

இந்த விடயத்தில் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள இழப்புக்கள் குறித்தும், செலுத்திய தொகையை மீட்பது தொடர்பிலும் சீன அரசாங்கத்துடனும் சீன உர நிறுவனத்துடனும் பேச்சு நடத்தி வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.



இந்தப் பிரச்னை தொடர்பான கணக்காய்வு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், சேதன உரம் கொள்வனவு தொடர்பான கொடுக்கல் - வாங்கலில் ஏற்பட்டுள்ள குறைபாடுகள் குறித்தும் ஆராயப் படவுள்ளதாகவும் அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாதிரி பரிசோதனை தோல்வியடைந்ததை அடுத்து, சீனாவிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய சேதன உரம் திருப்பி அனுப்பப்பட்டது.

எனினும், அமைச்சரவை அங்கீகாரத்துடன் குறித்த நிறுவனத்துக்கு 62 இலட்சம் அமெரிக்க டொலர்களை இலங்கை செலுத்தியது.

இந்தநிலையில், குறித்த தொகையை ஏதேனும் ஒரு முறையின் கீழ் இலங்கைக்கு கொண்டுவருவது தொடர்பில் கலந்துரையாடல் இடம்பெறுவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

# மன்னார் மடு மாத ஆலய திருவிழா; கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுப்பு!

## 5 இலட்சம் பக்தர்கள் பங்கேற்றனர்

மன்னார், ஜூலை 03

**மன்னார் மடு திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா திருப்பலி ஒப்புக்கொடுப்பு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணியளவில் நடைபெற்றது. மன்னார் மறைமாவட்ட ஆயர் இமானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் துணை ஆயர் அருட்திரு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர்.**



கடந்த ஜூன் மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்தைத் தொடர்ந்து நவநாள் ஆராதனை திருப்பலிகள் நடைபெற்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை வேஸ்பர்ஸ் ஆராதனை நடைபெற்றது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணிக்கு திருவிழா திருப்பலி மன்னார் மறை மாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில், கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் துணை ஆயர் அருட்திரு அன்ரன் ரஞ்சித் அடிகளார் மற்றும் மடு பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், குருக்கள் இணைந்து திருவிழா திருப்பலியை கூட்டுத் திருப்பலியாக தமிழ், சிங்கள மொழிகளில் ஒப்புக்கொடுத்தனர்.

திருவிழா திருப்பலியை தொடர்ந்து மடு அன்னையின் ஆசீர் பக்தர்களுக்கு வழங்கப் பட்டது. திருவிழா திருப்பலியில் அருட்தந்தையர்கள், அருட் சகோதரர்கள், திணைக்கள தலைவர்கள் உள்ளடங்கலாக சுமார் 5 இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மேலும், 1924ஆம் ஆண்டு மருதமடு திருப்பதியிலே பல ஆயர்கள் சூழ மருதமடு அன்னைக்கு முடிசூட்டு விழா இடம்பெற்றது. முடிசூட்டு விழாவின் நூற்றாண்டு நிறைவு யூபிலி பெருவிழாவாக 2024 ஆம் ஆண்டு ஜூலையில் கொண்டாடப்படவுள்ளது.

இதனை, முன்னிட்டு நேற்று திருவிழாவின் போது மன்னார் மறைமாவட்ட ஆயர் யூபிலி நூற்றாண்டு விழாவை பிரகடனம் செய்து வைத்தார். இதனைத் தொடர்ந்து மருதமடு அன்னையின் திருச் சொரூபத்தின் பின் விசேட விதமாக யூபிலி ஆண்டை பிரகடனப்படுத்துவதோடு, அதனை வெளிப்படுத்தும் முகமாக வருடம் முழுவதும் பறக்க விடப்படுகின்ற யூபிலி கொடி மருதமடு ஆலய முன் மண்டபத்தில் ஏற்றி வைக்கப் பட்டது. (ஐ)

# போலி மருத்துவர் பொலிஸாரால் கைது!

கொழும்பு, ஜூலை 03

தொழில் ரீதியாக பதிவு செய்யப்பட்ட மருத்துவர் போன்று நடித்து சட்டவிரோதமாக மருத் துவ சிகிச்சை நிலையத்தை நடத்திய ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேக நபர் உஸ்வெடகெய்யாவ பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். 55 வயதான சந்தேக நபர் கொழும்பு ஆமர் வீதியை வதிவிடமாகக் கொண்டவராவார்.

குற்றத்தடுப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

மருத்துவ சிகிச்சை மற்றும் மருத்துவ சான்றிதழை பெறுவதற்காக பொலிஸ் முகவர் ஒருவர் அனுப்பி வைக்கப்பட்டு, பின்னர் கைதுசெய்யப்பட்டாரென பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மரத்திலிருந்து ஆற்றில் குதித்த சிறுவர்கள் இருவர் மூழ்கி பலி!

கொழும்பு, ஜூலை 03

மரத்திலிருந்து ஆற்றில் குதித்த சிறுவர்கள் இருவர் மூழ்கிப் பலியாகினர்.

சிறீபுர - திஸ்ஸபுர பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 12 மற்றும் 15 வயதுடைய இரு சிறுவர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

மீட்கப்பட்ட இரு சிறுவர்களும் சிறீபுர மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையிலேயே சிறுவர்கள் இருவரும் உயிரிழந்தனர்.

மரத்தில் இருந்து ஆற்றில் குதித்த இரு சிறுவர்களின் தலைகளும் இடித்துக் கொண்டதிலேயே அவர்கள் இருவரும் பாதிக்கப்பட்டு நீரில் மூழ்கினர் என்று தெரிய வருகின்றது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து வருகின்றனர். (ஐ)

# நிலநடுக்கம் ஏற்படக்கூடிய பகுதிகள் அடையாளம்!

கொழும்பு, ஜூலை 03

எதிர்வரும் காலங்களில் இலங்கையில் நிலநடுக்கம் ஏற்படக்கூடிய பல பிரதேசங்களை பேராதனை பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையின் பேராசிரியர் அதுல சேனாரத்ன அடையாளம் கண்டுள்ளார்.

ஆனால், சாத்தியமான அதிர்ச்சிகளால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது என்று அவர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை தொடக்கம் உஸ்ஸங்கொடை வரையிலான செயலற்ற டெக்டோனிக் எல்லை, மத்திய மலையகத்தைச் சுற்றியுள்ள நீர்த்தேக்கம் தொடர்பான பகுதிகள் இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இலங்கைக்கு சுனாமி ஆபத்து ஏற்பட்டால் அது சுமாத்ராவின் முனையில் நிலநடுக்கம் காரணமாக இருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

ஆனால், அண்மைக்காலமாக அவ்வாறானதொரு நிலை ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே காணப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# 85 கிலோ கேரள கஞ்சா மன்னாரில் சிக்கியது!

மன்னார், ஜூலை 03

மன்னார் - மாந்தை - பள்ளமடு வீதியில் 85 கிலோ கிராம் கேரள கஞ்சா பொதிகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட குற்றப் புலனாய்வு பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

இதன்போது, வாகனத்தில் கொண்டு செல்லப்பட்ட சுமார் ஒரு கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியுடைய 85 கிலோ கிராம் கேரள கஞ்சா மீட்கப் பட்டதுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் 35 வயதுடைய மன்னார் - பேசாலை மற்றும் முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதிகளை சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் மேலும் இருவர் தப்பிச் சென்ற நிலையில், அவர்கள் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைக்காக சந்தேக நபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட கஞ்சா பொதிகள், வாகனங்கள் ஆகியன மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ)

# 2 ஆயிரம் கிலோ பீடி இலைகளுடன் புத்தளத்தில் சந்தேகநபர் கைது!

புத்தளம், ஜூலை 03

புத்தளம் - வண்ணாத்தவில்லு - கரைத்தீவு பகுதியில் மீன்பிடி படகு ஒன்றின் மூலம் கடத்திச் செல்லப்பட்ட சுமார் 2 கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் நேற்று காலை கைப்பற்றப்பட்டன. அத்துடன், இவற்றை கடத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

1,947 கிலோ பீடி இலைகள் கொண்ட 65 பொதிகளுடன் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். இதற்காக அவர் பயன்படுத்திய மீன்பிடி படகு ஒன்றையும் அவர் கடற்படையினர் கைபற்றியுள்ளனர்.

இந்த பீடி இலைகள் சட்டவிரோதமான முறையில் இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக கடத்திவரப்பபட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மலையகத்தில் கனமழை; இயல்பு வாழ்க்கை பாதிப்பு

ஹற்றன், ஜூலை 03

மலையகத்தின் மேற்கு சரிவுப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் பெய்துவரும் கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இந்த நிலையில், நோர்டன் பிரிட்ஜ் பகுதிகளில் பெய்த கடும் மழை காரணமாக விமல சுரேந்திர நீர்த்தேக்கம் நேற்றுக் காலை முதல் நிரம்பி வழிவதாக நீர்த்தேக்கத்துக்கு பொறுப்பான பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

கனமழை காரணமாக ஹற்றன் - நுவரெலியா, ஹற்றன் - கொழும்பு பிரதான வீதிகளில் மண்சரிவு ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன என்றும், அதனால் இந்த வீதிகளில் கவனமாக வாகனங்களை செலுத்துமாறும் பொலிஸார் சாரதிகளுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (ஐ)

# சொத்து விவரங்களை வழங்குவதற்கு தொழில்சங்க தலைவர்கள் பின்னடிப்பு

கொழும்பு, ஜூலை 03

சொத்துப் பொறுப்பு அறிக்கையை வழங்குமாறு தொழில் சங்கத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், அவர்கள் இதுவரை சொத்துப் பொறுப்பு அறிக்கையை வழங்கவில்லை என தொழிலாளர் அமைச்சின் செயலாளர் ஆர். பி. விமலவீர தெரிவித்தார்.

சொத்து பொறுப்பு சட்டத்தின்படி, அரச மற்றும் அரை-அரச நிறுவனங்களின் தொழில் சங்கத் தலைவர்கள் தங்கள் சொத்துப் பொறுப்பு அறிக்கையை தொழிலாளர் அமைச்சகத்தின் செயலரிடம் சமர்ப்பிக்க வேண்டும். இதுவரை எந்த தொழிற்சங்கத் தலைவரும் அந்த அறிக்கைகளை சமர்ப்பிக்கவில்லை என்று செயலாளர் கூறினார்.

சட்டத்தின் விதிகளின்படி எதிர்காலத்தில் இதற்கு எதிராக



நடவடிக்கை எடுக்கப்படும் - என்றும் அவர் தெரிவித்தார்.

# சபாநாயகர் மகிந்த யாப்பா பக்கச்சார்பாக நடக்கிறார்!

## எதிரக்கட்சி தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 03

**சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன ஆளும் தரப்பின் ஆலோசனைகளுக்கு அமைய ஒருதலைபட்சமாகவும் - சர்வாதிகாரியாகவும் செயல்படுகிறார். சகல எதிர்க்கட்சிகளுடனும் கலந்துரையாடி சபாநாயகரின் செயல்பாடுகள் குறித்து ஒரு தீர்மானம் எடுப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்ற அமர்வின் பின்னர் நேற்று முன்தினம் இரவு செய்தியாளர்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். மேலும்,

தேசிய கடன் மறுசீரமைப்பு செயல்திட்டம் தொடர்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் இரு நாள் விவாதத்தை கோரினோம். தேசிய கடன் மறுசீரமைப்பு குறித்து நாட்டு மக்கள் பல விடயங்களை தெரிந்துகொள்ள வேண்டும். மக்களுக்கு தெரியாமல் மக்களின் இறுதி சேமிப்பை கொள்ளையடிக்கும் அரசாங்கத்தின் செயல்பாட்டை வெளிப்படுத்துவதற்காகவே இருநாள் விவாதம் கோரினோம்.

இருநாள் விவாதம் அவசியமில்லை. சனிக்கிழமை முழு நாள் விவாதத்தை நடத்தலாம். தேவையாயின் விவாதத்துக் கான காலத்தை நீடித்துக் கொள்ளலாம் என கட்சித் தலைவர் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. இந்த தீர்மானத்துக்கு சபாநாயகர் இணக்கம் தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில் தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான விவாதத்தில் பெரும்பாலான உறுப்பினர்கள் உரையாற்ற இருந்த நிலையில் அவர்களுக்கு அனுமதி வழங்காமல் தன்னிச்சையாக செயல்பட்டு வாக்கெடுப்பை சபாநாயகர் நடத்தினார். வாய்ப்பு கோரியவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

கட்சித் தலைவர் கூட்டத்தில் எடுத்த தீர்மானங்களை புறக்கணித்து ஆளும் தரப்பின் ஆலோசனைகளுக்கு அமைய சபாநாயகர் ஒருதலைப்பட்சமாக செயல்படுகிறார். பாராளுமன்றம் அரசாங்கத்துக்கு சொந்தமானது



என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு சபாநாயகர் சர்வாதிகாரி போல் செயல்படுகிறார். சபாநாயகர் ஒருவர் எவ்வாறு செயல்படக்கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன செயல்படுகிறார். பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் சகல எதிர்க்கட்சிகளுடன் கலந்துரையாடி அவரின் செயல்பாடுகள் தொடர்பில் ஒரு தீர்மானம் எடுப்போம் - என்றார். (ஐ)

# தேயிலையின் விலை சடுதியாக குறைந்தது

கொழும்பு, ஜூலை 03

எதிர்பாராதவிதமாக தேயிலை விலை குறைவடைந்துள்ளதாக தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் லயனல் ஹேரத் தெரிவித்துள்ளார்.

ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு, தேயிலை வரத்து அதிகரிப்பு மற்றும் பொருட்களின் விலை அதிகரிப்பு என்பனவற்றால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஒரு கிலோ தேயிலையின் சராசரி விலை 1,500 ரூபாயாக இருந்தாலும் அது சுமார் 1,000 ரூபாயாக குறைவடைந்துள்ளது என்று தெரிவித்துள்ள அவர், தேயிலை தொழிலை பராமரிப்பது பெரும் சிக்கலாக மாறியுள்ளதாகவும் தெரிவித்தார்.

250 முதல் 270 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கச்சா தேயிலையின் விலை சுமார் 165 ரூபாயாக குறைந்துள்ளது என்றும் அவர் கூறினார். (ஐ)

# கார் விபத்தில் ஒருவர் பலி; நான்கு பேர் படுகாயம்!

கொழும்பு, ஜூலை 03

பதுளை - ஹாலிஎல பகுதியில் இடம்பெற்ற கார் விபத்தில் ஒருவர் பலியானார். நால்வர் காயமடைந்துள்ளனர்.

நேற்று அதிகாலை இடம்பெற்ற இந்த விபத்தில் இரண்டு சிறுவர்களும் இரண்டு பெண்களும் காயமடைந்த நிலையில் பதுளை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தில் எல்ல பகுதியைச் சேர்ந்த 51 வயதான கார் சாரதியே உயிரிழந்தார் என்று பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் வீதி அருகில் இருந்த மரமொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானது.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளவர்களின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# கடன் மறுசீரமைப்பு நிறைவேற்றம் நிதியமைச்சுக்கு அறிவிக்கப்பட்டது

கொழும்பு, ஜூலை 03

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு திட்ட யோசனை நேற்று முன்தினம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட நிலையில் நிதி அமைச்சுக்கு இது குறித்து உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர நிதி அமைச்சின் செயலாளருக்கு எழுத்து மூலம் இதனை அறிவித்துள்ளார்.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பாராளுமன்றில் முன்வைக்கப்பட்ட பிரேரணை பாராளுமன்றத்தில் திருத்தங்களுடன் 60 மேலதிக வாக்குகளால் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிறை அதிகாரி மீது தாக்குதல் இராணுவ கப்டனும் கைதானார்

கொழும்பு, ஜூலை 03

நுவரெலியா கிரிகோரி ஏரிக்கு அருகில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பதுங்கியிருந்த போது மூன்று துப்பாக்கிகள் மற்றும் ரவைகளுடன் இராணுவ கப்டன் மற்றும் மினுவாங்கொடை தாக்குதலின் பிரதான சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக குற்ற விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களிடமிருந்து கார் மற்றும் ஒரு வானும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த மே மாதம் 12ஆம் திகதி அதிகாலை 4 மணியளவில் மினுவாங்கொட ராஜசிங்கபுர சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவரின் வீட்டுக்கு சென்ற சந்தேக நபர்கள் அவரை மண்டியிட செய்து துப்பாக்கியால் தலையில் தாக்கியுள்ளனர்.

இதன்போது சிறைச்சாலை அதிகாரியின் சகோதரி மற்றும் தாயார் மீதும் சந்தேகநபர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலின்போது மற்றுமொரு நபர் கைபேசியில் காணொலியாக பதிவு செய்து வெளிநாட்டில் உள்ள பாதாள உலகக் குழுத் தலைவர் ஒருவருக்கு அனுப்பியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சிறைச்சாலை உத்தியோகத்தரை தாக்கிய சம்பவம் தொடர்பில் பண்டாரவத்தை பிரதேசத்தை சேர்ந்த 28 வயதுடைய ஒருவரும் ஹெயன்துடுவ தலுக்கல வீதியை சேர்ந்த 25 வயதுடைய ஒருவரும் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ)

# சுங்கம் கைப்பற்றும் வாகனங்களை பொலிஸ், படைகளுக்கு வழங்க முடிவு

கொழும்பு, ஜூலை 03

சுங்கத்தினரால் கைப்பற்றப்படும் மற்றும் சட்ட விரோதமான முறையில் பொருத்தப்பட்ட (அசெம்பிள்) வாகனங்களை சுங்கத்தினரிடம் ஒப்படைப்பதற்கு பதிலாக, அவற்றை பறிமுதல் செய்து பொலிஸ் மற்றும் பாதுகாப்பு பிரிவு சேவைக்கு வழங்குவதில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதற்காக புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் அதற்கு ஏற்ற வகையில் பொலிஸ் சட்ட திணைக்களம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட வாகனங்கள் கைப்பற்றப்பட்ட பின்னர், அவை அரச பகுப்பாய்வாளருக்கு அனுப்பப்பட்டு, அது சட்ட விரோத வாகனம் என்று நிரூபிக்கப்பட்டால் சுங்கத்தின் பொறுப்பில் வைக்கப்படும்.

இனிமேல் இந்த நடைமுறையின்றி, பறிமுதல் செய்யப்படும் வாகனங்களை பொலிஸார் மற்றும் படையினரின் பயன்பாட்டுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# ஐந்து மணிநேரம் கடலில் தத்தளித்த மீனவர்கள் மீட்பு

கொழும்பு, ஜூலை 03

ஐந்து மணி நேரத்துக்கும் அதிகமாக கடலில் தத்தளித்த மீனவர்கள் இருவர் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

தங்காலை மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடலுக்குச் சென்ற மீன்பிடி படகொன்று கடலலையில் சிக்கி நீரில் மூழ்கியது. இதனால், கடலுக்குள் விழுந்த தங்காலை பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் இருவர் ஐந்து மணி நேரத்துக்கும் அதிகமாக கடலில் உயிருக்கு போராடினர். இந்த நிலையில், நீண்டநாள் படகு ஒன்றின் மூலமாக அவர்கள் காப்பாற்றப்பட்டனர்.

தங்காலை மீன்பிடி துறைமுகத்தில் இருந்து 29ஆம் திகதி படகில் புறப்பட்ட இந்த மீனவர்கள் 30ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் படகு மூழ்கியதால் கடலில் தத்தளித்தனர்.

பின்னர், காலை 7 மணியளவில் அப்பகுதியால் சென்ற நீண்டநாள் படகு ஒன்று அவர்களை காப்பாற்றி கரை சேர்த்தது. (ஐ)

# வனஜீவராசிகள் திணைக்கள காவலர்கள் மீது தாக்குதல்!

## - சந்தேகத்தில் ஆறு பேர் கைது -

கொழும்பு, ஜூலை 03

இறைச்சிக்காக மிருகங்களை வேட்டையாடுவோரை தேடும் நடவடிக்கையில் ஈடுபட்ட வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் இருவர் மீது ஒரு குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்றுஉடவளவை வனவிலங்கு பணிமனைதெரிவித்துள்ளது.

இரத்தினபுரி - உடவளவை தேசிய பூங்காவின் தலைமை பணிமனையில்பணிபுரியும் இரு உத்தியோகத்தர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

குறித்த குழுவினர் வனவிலங்கு அதிகாரிகளுக்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளதாகவும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தேடுதல் நடவடிக்கையின்போது மிருகங்களின் தலை, இரண்டு துப்பாக்கிகள், இரண்டு ரைபிள் தோட்டாக்கள், குளிர்சாதன பெட்டி, சைக்கிள், யானைத் தோல், இறைச்சி வெட்ட பயன்படுத்தப்படும் மூன்று கத்திகள் என்பன கைப்பற்றப்பட்டன. அத்துடன், சந்தேகத்தின் பேரில் ஆறு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.(ஐ)

ஈழநாடு



# வாக்னர் குழு: தனியார் இராணுவம் என்றால் என்ன?

# அமெரிக்காவின் பிளெக்வாட்டர் குழுவும் ஈராக் ஆப்கான் போரில் முக்கிய பங்கு வகித்தது!

ஜுபைர் அகமது

ரஷ்ய அரசுக்கு எதிராக ஒரு தனியார் ராணுவம் படை திரட்டி கிளர்ச்சியைச் செய்து, அச்சம் காட்டிய விவகாரம் உலகையே விழி விரிந்து பார்க்க வைத்துள்ளது. இதைத் தொடர்ந்து, உலகம் முழுவதும் உள்ள தனியார் ராணுவங்கள் பற்றிய கேள்விகளும் கிளம்பியுள்ளன.

ரஷ்ய அரசுக்கு எதிராகப் படையைத் திரட்டி அச்சம் காட்டிய வாக்னர் குழுவின் தலைவர் யெவ்கெனி ப்ரிகோஜின், தங்களது கிளர்ச்சி தோல்வியடைந்ததை அடுத்து பெலாரூஸுக்கு சென்றுவிட்டார். ப்ரிகோஜின் பெலாரூஸ் வந்துள்ளதை அந்நாட்டு தலைவர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ உறுதிப்படுத்தியுள்ளார்.

வாக்னர் குழுவின் தோல்விக்குப் பிறகு கடந்த செவ்வாயன்று தனது ராணுவத்திடம் உரையாற்றிய ரஷ்ய அதிபர் விளாதிமிர் புடின், உள்நாட்டு யுத்தத்தை தான் நிறுத்திவிட்டதாகக் குறிப்பிட்டார்.

வாக்னர் படையினரின் கிளர்ச்சி புடினை நெருக்கடிக்கு உள்ளாக்கியது, உக்ரேனுடனான போரில் அவர்கள் பங்கேற்றது போன்றவை தனியார் ராணுவம் தொடர்பாகப் பல்வேறு கேள்விகளை எழுப்பியுள்ளன.

தனியார் ராணுவப் படைகள் தொடர்பான விவகாரங்களில் பலரும் தங்களின் கவனத்தைக் குவிக்கத் தொடங்கியுள்ளனர்.

போர்க்களமே அவர்களது வாழ்க்கை, எங்கெல்லாம் யுத்தம் இருக்கிறதோ அங்கெல்லாம் அவர்களும் இருப்பார்கள். உலகின் முக்கிய நாடுகளுக்காக அவர்கள் வேலை செய்கிறார்கள். சொல்லப்போனால், சில அரசு சாரா நிறுவனங்களும் தனியார் ராணுவப் படைகளை பயன்படுத்திக் கொள்கின்றன.

தனியார் படைகள் பல நாடுகளில் செயல்பட்டுக் கொண்டிருந்தாலும், அவற்றின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது. எனினும், ரஷ்யாவின் வாக்னர் குழு மற்றும் அமெரிக்காவின் அகாடமி (பழைய பெயர் பிளாக்வாட்டர்) ஆகியவையே சமீப காலங்களில் செயல்படும் இரண்டு நன்கு அறியப்பட்ட தனியார் ராணுவ நிறுவனங்கள். இவை பல ஆண்டுகளாக சர்ச்சையிலேயே இருந்து வருகின்றன.

ஷான் மெக்ஃபீட் வாஷிங்டன் டிசியில் உள்ள தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக உள்ளார். பல ஆண்டுகளாக தனியார் ராணுவத்தின் ஒரு பகுதியாக இருந்த அவர், இந்த உலகத்தைப் பற்றி இரண்டு புத்தகங்களையும் சில நாவல்களையும் எழுதியுள்ளார்.

பிபிசி உடனான தொலைபேசி உரையாடலில், தனியார் ராணுவம் அல்லது கூலிப்படை என்பது ஒரு தொழில் என்று அவர் கூறுகிறார்.

மேலும் பேசிய அவர், "அவர்களை பற்றி புத்தகங்களை எழுதியவன் என்ற முறையில் கூறுகிறேன், கூலிப்படையினர் அல்லது தனியார் ராணுவ வீரர்கள் என்று அழைக்கப்படும் இவர்களின் வாழ்க்கை பெரும் ஆபத்து நிறைந்தது. பெரிய நாடுகள் இது குறித்துப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை," என்று கூறினார்.

இந்த விவகாரம் 1990களில் தொடங்கியது, ஆனால் அரசுகள் அவற்றைக் கட்டுப்படுத்துவதில் தாமதமாகவே செயலாற்றுகின்றன, இதே முறையை அவை பின்பற்றினால் சர்வதேச உறவுகளில் அது தாக்கத்தை ஏற்படுத்தும் என்கிறார் ஷான் மெக்ஃபீட்.



தனியார் ராணுவத்தை அமைக்க மக்கள் சிந்திக்கத் தொடங்குவார்கள். நாளை ஈலோன் மஸ்க் (ட்விட்டர் மற்றும் டெஸ்லாவின் உரிமையாளர்) தனது சொந்த ராணுவத்தை உருவாக்க முடியும். தனியார் ராணுவத்தை யார் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். இந்தப் போக்கு தொடர்ந்தால், உலகம் மாறும், அராஜகம் பரவும்," என்றார்.

யெவ்கெனி ப்ரிகோஜினுக்கு 62 வயதாகிறது. அவர், அதிபர் புடினால் உருவானவர். உலகமெங்கும் ரஷ்ய செல்வாக்கை மீண்டும் நிலைநிறுத்துவதை நோக்கமாகக் கொண்ட புடின் 2014இல் வாக்னர் குழுவை உருவாக்கினார்.

வாக்னர் குழுவின் கிளர்ச்சியால், புடினின் ஆட்சிக்கு ஆபத்து ஏற்பட்டதாகத் தோன்றுவதாகக் கூறுகிறார் டெல்லியில் உள்ள அரசியல் மற்றும் வெளியுறவுத் துறை நிபுணர் டாக்டர் சுவரோக்மல் தத்தா.

இந்தக் குழுவின் வீரர்கள் எண்ணிக்கை 20,000 முதல் 35,000 வரை உள்ளது. மேலும் இது உக்ரேனிய ராணுவத்திற்கு எதிராக உக்ரேனின் தெற்கு மற்றும் கிழக்கில் பெரிய அளவிலான வெற்றியை அடைந்துள்ளது.

கடந்த 2014இல் ரஷ்யா கிரைமியாவை ஆக்கிரமித்தபோது, இந்தக் குழுவின் பங்களிப்பும் பெரியளவில் அதில் இருந்தது.

தனியார் ராணுவத்தின் செயல்பாடுகள் சர்ச்சைக்குரியவை. எடுத்துக்காட்டாக, செப்டம்பர் 2007இல், ஈராக் தலைநகர் பாக்தாத்தில் ஒரு படுகொலை நடந்தது. இதில் அமெரிக்க தனியார் பாதுகாப்பு நிறுவனமான பிளாக்வாட்டர் வேர்ல்டுவைடின் (தற்போது அகாடமி என்று அழைக்கப்படுகிறது) வீரர்களின் தொடர்பு உள்ளது, இது ஈராக்கில் பாதுகாப்பு சேவைகளை வழங்க அமெரிக்க அரசாங்கத்தால் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

எதிரே வந்த வாகனத்தின் அச்சுறுத்தலை உணர்ந்த பிளாக்வாட்டர் பணியாளர்கள் பரபரப்பான சந்திப்பில் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும், வாகனங்களில் சென்றவர்கள், நடந்து சென்றவர்கள் ஆகியோர் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் ஈராக்கைச் சேர்ந்த 17 பேர் கொல்லப்பட்டனர், பலர் காயமடைந்தனர். பாதிக்கப்பட்டவர்களில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளும் அடங்குவர். அவர்களில் பலர் நிராயுதபாணிகளாக இருந்தனர், வாகனத் தொடர்வரிசைக்கு வெளிப்படையான அச்சுறுத்தலை ஏற்படுத்தவில்லை. இந்தச் சம்பவத்திற்கு இராக் அரசு கடும் கண்டனம் தெரிவித்ததுடன், சர்வதேச அளவிலும் இச்சம்பவம் கடும் கண்டனத்தைப் பெற்றது.

பிளாக்வாட்டர் படையைப் பயன்படுத்துவது மிகையானது மற்றும் நியாயமற்றது என்று இந்தப் படுகொலை பற்றிய அமெரிக்க விசாரணை முடிவு செய்தது. அமெரிக்க நீதித்துறை பின்னர் இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய பல பிளாக்வாட்டர் வீரர்கள் மீது கொலைக் குற்றம் சாட்டியது.

ஈராக்கில் தனியார் பாதுகாப்பு வீரர்களின் சர்ச்சைக்குரிய பங்கை இந்தச் சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.

மேலும், இந்தச் சம்பவம் போர்க்களத்தில் இயங்கும் தனியார் ராணுவ நிறுவனங்களைக் கண்காணிப்பது குறித்துப் பரவலான விவாதத்தை கிளப்பியது.

பேராசிரியர் ஷான் மெக்ஃபீட் ஆப்பிரிக்காவின் பல நாடுகளில் தனியார் ராணுவத்தின் ஒரு பகுதியாக இருந்துள்ளார். இந்த வீரர்கள் தொடர்பாக எந்தவித உரிமை கோரலும் இல்லை, எனவே அரசுகள் அவர்களைப் பயன்படுத்துகின்றன என்று அவர் கூறுகிறார்.

"கூலிப்படையைப் பணியமர்த்துவதற்கு இது ஒரு சிறப்புக் காரணம். அரசாங்கத்தைச் சேர்ந்த வீரர் யாரேனும் ஒருவரைக் கொன்றால், அவர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படுவார். ஆனால் தனியார் ராணுவ குழுவைச் சேர்ந்த ஒருவர் அதே குற்றத்தைச் செய்தால் எந்த வித நடவடிக்கைக்கும் உட்படுத்தப்படாமல் வீடு திரும்புவார்," என்று ஷான் மெக்ஃபீட் குறிப்பிடுகிறார்.

**கூலிப்படையின் வரலாறு**

ராணுவத்தில் கூலிப்படையின் பங்கு வரலாற்றில் மிகவும் பழைமையானது. தனிப்பட்ட ஆதாயங்கள், அரசியல் நலன்கள், கருத்தியல் காரணங்களுக்காக கூலிப்படையினர் பல நூற்றாண்டுகளாகப் போர்களில் ஈடுபட்டுள்ளனர்.

வரலாறு முழுவதும், அரசின் வழக்கமான ராணுவத்திற்கு உதவுதல், வணிக நலன்களைப் பாதுகாத்தல் மற்றும் சிறப்பு ராணுவ நடவடிக்கைகளை நடத்துதல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக தனியார் படைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பண்டைய எகிப்தில், பார்வோன் அண்டைப் பகுதிகளிலிருந்து கூலிப்படையை அமர்த்தி, ஒரு நிலையான ராணுவத்தை நிர்வகித்து வந்தார்.

பண்டைய ரோமானியப் பேரரசு தனது படைகளுக்குத் துணையாக ஜெர்மானிய பழங்குடியினர் போன்ற கூலிப்படையினரைப் பயன்படுத்தியது. பேரரசர்கள் தங்களுக்கான தனிப்பட்ட மெய்க்காப்பாளர் பிரிவுகளையும் உருவாக்கினர்.

**காலனித்துவ மற்றும் மறுமலர்ச்சி காலம்**

ஐரோப்பிய உருவாக்கம்: டச்சு கிழக்கிந்திய கம்பெனி மற்றும் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி போன்ற தனியார் நிறுவனங்கள் தங்கள் வணிக நலன்களைப் பாதுகாக்கத் தனியார் படைகளை நிறுவின.

இத்தாலி மறுமலர்ச்சி: வெனிஸ் மற்றும் ஃப்ளோரன்ஸ் போன்ற சக்தி வாய்ந்த நகர-மாநிலங்கள் தங்கள் சார்பாகப் போர்களை நடத்த கூலிப்படைகளைப் பயன்படுத்தின.

**ஏகாதிபத்தியத்தின் சகாப்தம்**

ஐரோப்பிய பேரரசுகள்: காலனித்துவம் உச்சத்தில் இருந்தபோது, ஐரோப்பிய அரசுகள் தங்கள் காலனிகளை விரிவுபடுத்தவும் கட்டுப்பாட்டைப் பராமரிக்கவும் தனியார் படைகள் மற்றும் கூலிப்படைகளைப் பயன்படுத்தின.

அமெரிக்க புரட்சி: அமெரிக்க புரட்சிப் போரின்போது அமெரிக்க குடியேற்றவாசிகள் மற்றும் பிரிட்டிஷ் பேரரசு ஆகிய இரு தரப்பிலும் கூலிப்படையினர் பயன்படுத்தப்பட்டனர்.

**நவீன காலத்தில் கூலிப்படைகளின் பயன்பாடு**

காலனித்துவத்துக்குப் பிந்தைய மோதல்கள்: 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தனியார் ராணுவ நிறுவனங்கள் முக்கியத்துவம் பெற்றன. அரசுகள் மற்றும் அரசு சாரா அமைப்புகளின் சார்பில் பல போர்களில் அவை பங்கேற்றன.

ஈராக், ஆப்கானிஸ்தான் போர்கள்: ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் நடந்த போர்களின்போது, அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் பிளாக்வாட்டர் போன்ற தனியார் ராணுவ நிறுவனங்களைப் பெரிதும் நம்பியிருந்தன. இந்தத் தனியார் ராணுவ நிறுவனங்கள் பாதுகாப்பு, தளவாட ஆதரவு மற்றும் பிற சேவைகளை வழங்கின.

சமகால செயல்பாடுகள்: உலகெங்கிலும் மோதல்கள் மற்றும் மோதல்களுக்குப் பிந்தைய சூழல்களில் தனியார் ராணுவ நிறுவனங்கள் தொடர்ந்து பங்கு வகிக்கின்றன. இருப்பினும், பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை மற்றும் சாத்திய மான மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது நிலைமை கவலைக்குரியதாகவே உள்ளது. ●



# நெருக்கடி மத்தியில் வாழ்வாதாரம், கடன் மற்றும் சமூகப் பாதுகாப்பு

**சுகன்யா காண்டீபன்**
(பொருளாதார நீதிக்கான பெண்நிலைவாதக் குழுமம்)

கொவிட்-19 மற்றும் அதனைத் தொடர்ந்து இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் சமூகப் பாதுகாப்பின் நிலை தொடர்பான ஆய்வு ஒன்று பொருளாதார நீதிக்கான பெண்நிலைவாதக் குழுமத்தினால் கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது.

**ஆய்வினூடான அவதானிப்புகள்**

வேலைவாய்ப்புகள் குறைவடைகிறது, வாழ்க்கைச் செலவு அதிகரிக்கிறது. இதன் மத்தியில் உணவு, கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்வது சுமையாக மாறியுள்ளது. மக்கள் கடன் நிலைக்குள் தள்ளப்படும் அளவு சடுதியாக அதிகரித்துள்ளது. இவற்றை ஆய்விற்கூடாக அவதானிக்க முடிந்தது.

இந்த நிலையில், அரசின் தற்போதைய சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றமுடியாத சிறியளவு பணத்தை வழங்குகின்றன. அதிகூடிய பணவீக்கம் ஏற்பட்டுள்ள சூழலில் கிடைக்கும் இச்சிறிய பண உதவியை உணவு, கல்வி, மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளில் எந்தத் தேவைக்காகப் பயன்படுத்துவது என்ற ஒரு குழப்பம் மக்கள் மத்தியில் உள்ளது. உலக நாணய நிதியம் மற்றும் உலக வங்கியினால் முன்மொழியப்பட்ட அஸ்வெசும திட்டத்தின் கீழ் அண்மையில் நடத்தப்பட்ட தேர்வில் தற்போது பயனாளர்களாக இருப்பவர்கள் உட்பட தேவையுடைய பலர் இத்திட்டங்களுக்குள் உள்வாங்கப்படவில்லை.

உடனடித் தாக்கங்களாக மேற்கூறப்பட்டவை காணப்படினும் மக்கள் நீண்டகால வரலாற்று பின்னணிகளின் தாக்கத்துடனே இந்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிந்தது. அந்த வகையில் பிராந்திய ரீதியாக வடக்கை எடுத்து பார்க்கும்போது அது இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு அனுபவத்தைக் கொண்டதாக இருக்கிறது.

**வடக்கின் அனுபவம்**

எழுமாறாக ஆய்வுக்குள் உள்வாங்கப்பட்ட குடும்பங்களின் வரலாற்றில் காணப்பட்ட ஒற்றுமையான விடையமாக யுத்தத்துடன் ஏற்பட்ட வாழ்வாதார பாதிப்புகள் இருந்தது. அவர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்தபோது 1995 இலிருந்து 2009ஆம் ஆண்டுவரை பல தடவைகள் இடப்பெயர்வுகளை சந்தித்துள்ளதாகவும், ஒவ்வொரு தடவையும் தாம் சிறிது சிறிதாக சேமித்த அத்தனையும் இழந்த விரக்தியின் மத்தியில் ஆரம்பத்தில் இருந்து தமது வாழ்க்கையை மீள கட்டியெழுப்பும் சுமையை முழுமையாக சுமக்க வேண்டியிருந்ததாகவும் கூறியிருந்தனர்.

யுத்தம் நிறைவடைந்து ஒன்றரை தசாப்தங்களானாலும் இன்றுவரை இவ்வரலாற்றுப் பின்னணி கிராமப்புற பொருளாதாத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. இங்கு போரினால் பாதிக்கப்பட்ட மக்களாக இவர்களை வெளிக்காட்டுவது கட்டுரையின் நோக்கமல்ல, மாறாக அரசாங்கத்தின் கிராமப்புற அபிவிருத்தி கொள்கைகளில் காணப்பட்ட குறைபாடுகளும் அதன் தொடர்ச்சியாக மக்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

மக்கள் தங்கள் அனுபவங்களுக்கூடாக கூறுவது, யுத்தம் நிறைவடைந்து மீள்குடியேற்றங்கள் நடைபெற்றபோது வீட்டுத் திட்டங்கள் மட்டுமே வழங்கப்பட்டது. வாழ்வாதாரங்களை முன்கொண்டுபோவதற்கு நிலையான உதவிகள் வழங்கப்படவில்லை. இவ்வீடுகளை முழுமையாக கட்டிமுடிப்பதற்குக் கூட விடுவிக்கப்பட்ட நிதி போதவில்லை. இதனால் கடன்களை பெறவேண்டிய ஒரு சூழலும் உருவாகியிருந்தது.

வாழ்வாதார உதவிகளைப் பொறுத்தவரை, எப்போதாவது ஒரு சில தடவை அரசினால் வழங்கப்படும் பயனாளர் தெரிவு நிபந்தனைகளுக்கமைவான சில உதவிகளும் நிறுவனங்களிடமிருந்து பகுதி அளவிலான நன்கொடைகளுமே கிடைத்தன. வாழ்வாதாரத்தை நிலையாகக் கட்டியெழுப்புவதற்கு இத்திட்டங்கள் தொடர்ச்சி தன்மையற்றவையாகவும் பகுதியளவிலான உதவியை வழங்குவதாகவும் இருந்தன. தமக்கான பொருத்தப்பாடுடைய வாழ்வாதாரங்களை கட்டியெழுப்பும் முயற்சியில் மக்கள் நுண்நிதி கடன் பொறிக்குள் சிக்கினர். இதனால் ஏற்பட்ட பாதிப்புக்களின் உச்ச நிலையை 2016 - 2017ஆம் ஆண்டுகளில் நாம் கண்கூடாகக் காணக்கூடியதாக இருந்தது.

> **மக்கள் தங்கள் அனுபவங்களுக்கூடாக கூறுவது, யுத்தம் நிறைவடைந்து மீள்குடியேற்றங்கள் நடைபெற்றபோது வீட்டுத்திட்டங்கள் மட்டுமே வழங்கப்பட்டது. வாழ்வாதாரங்களை முன்கொண்டு போவதற்கு நிலையான உதவிகள் வழங்கப்பட வில்லை.**

நுண்நிதி கடன்பொறியிலிருந்து முற்றாக மீள்வதற்கு முன்னரே கொவிட்-19 நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய ஒரு நிர்பந்தம் ஏற்பட்டது. இதன்போது வெளியே வேலைக்குச் செல்ல முடியவில்லை. அந்த நேரம் அரசிடமிருந்தும், நன்கொடையாளர்களிடமிருந்தும் கிடைத்த ஒரு சில நிவாரண உதவிகளும் மக்கள் அந்த நெருக்கடியை கடந்து வருவதற்கு தற்காலிகமாக உதவின. வாழ்வாதார முதலீடுகளுக்காக எடுத்த கடன்களால் வருமானத்தை ஈட்டமுடியவில்லை. கடனை மீளசெலுத்துவதற்கான காலநீடிப்புகள் வழங்கப்பட்டன. இருப்பினும், அவர்கள் கடன்களை மீளச்செலுத்த வேண்டியவர்களாகவே இருந்தனர்.

**வாழ்வாதாரத்தின் தற்போதைய நிலை**

தற்போது நாட்கூலி தொழிலாளர்களுக்கு ஒரு வாரத்தில் 3 அல்லது 4 நாட்கள் மட்டுமே வேலைவாய்ப்புகள் காணப்படுகின்றன. கூலித்தொழிலாளியின் ஒரு நாளுக்கான கூலி 1,500 ரூபாவில் இருந்து 2,500 ரூபாவாக அதிகரித்திருப்பினும், ஒரு நாளுக்கான குடும்பச்செலவு 2,500 - 3,000 ரூபாவாக அதிகரித்துள்ள வாழ்க்கை செலவுகள் மத்தியில் போதியதாகவில்லை.

விவசாயிகளும் கடற்றொழிலாளர்களும் தமது முதலீட்டுக்கேற்ற விளைச்சலையும் உற்பத்திகளுக்கு ஏற்ற நியாயமான விலையையும் பெறமுடியாமல் இருக்கிறார்கள். கொவிட்-19க்கு முன்பு, ஒரு ஏக்கர் நெல் உற்பத்தி செய்வதற்கு 50,000 ரூபா செலவாகும். அதன் மூலம் 30 மூடை விளைச்சலைப் பெற முடியும். உணவுத் தேவைக்காக எடுத்தது போக ஏனையவற்றை விற்று சிறிய இலாபமும் கிடைக்கப்பெற்றது. தற்போது நெல் உற்பத்திக்கு 140,000 ரூபா செலவாகின்றது (அரச மானியங்கள் உள்ளடங்கியதான யூரியாவின் விலை மட்டுமே 1,500 ரூபாவிலிருந்து 10,000 ரூபாவாக அதிகரித்துள்ளது), விளைச்சலும் குறைவடைந்துள்ளது. அரசாங்கம் நெல்லின் விற்பனை விலையை ஒரு மூடை 5,000 ரூபாவாக நிர்ணயித்திருக்கிறது. கடற்றொழிலாளர்கள் ஒரு நாள் தொழில் செல்வதற்கு 40 - 60 லீற்றர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. முன்பு 1 லீற்றர் எண்ணெய் 87 ரூபாவாக இருந்து 380ரூபாவாக அதிகரித்து தற்போது 245 ரூபாவாக உள்ளது.



இவ்வாறான வாழ்வாதார நெருக்கடி மத்தியில் ஒவ்வொரு நாளும் உண்பதும், உடுப்பதும் கல்விகற்பதும் பாரிய சவாலாக மாறியுள்ளது. பெரும்பாலான வீடுகளில் இக்குறைந்த வருமானத்தில் குடும்பத்தை நிர்வகிப்பது என்பது பெண்களுக்கு பாரிய அழுத்தமாக மாறியிருக்கிறது. அதேநேரம் இவற்றிலிருந்து தம்மை விடுவிக்க அக்குடும்பத்தின் பெண்கள் சில முயற்சிகளையும் செய்கிறார்கள். அதாவது கிராம மட்டங்களில் உள்ள கூட்டுறவு அமைப்புகளிலும் சிறு குழுக்களிலும் தங்களால் இயன்றபோது சிறிய அளவிலாவது சேமிப்பதன் மூலமும், தேவைப்படும்போது கடன் வாங்குவதன் மூலமும் தங்கள் பணத்தை நிர்வகிப்பதற்கு அவர்கள் முயல்கின்றனர். ஆனால், நிதிக்கான தேவை அதிகரிப்பதால் அதை தமக்கான வாய்ப்பாகக் கருதி நுண்நிதி நிறுவனங்களும் புதிய தந்திரோபாயங்களுடன் மீண்டும் மக்களிடம் வருகிறார்கள். தாம் இக்கடன்களால் பாதிக்கப்படுகிறோம் என்பதைத் தெரிந்தும் கூட வேறு வழிகள் இல்லாமல் மக்களும் அவர்களிடம் கடன்பெறுகின்றனர்.

தற்போது மக்கள் கடன் நிலைக்குச் செல்வது யுத்தத்தின் பின்னரான நிலையிலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது. ஏனெனில், வருமான இழப்புகள் மத்தியில் ஏற்கனவே பெற்ற கடன்களை மீளச் செலுத்தவும் வேண்டும், அதேநேரம் அதிகரித்துள்ள வாழ்க்கை செலவுகள் மத்தியில் நாளாந்தம் உண்பதற்கும், உடுப்பதற்கும் கல்விகற்பதற்கும் கூட கடன்களை பெறவேண்டும். இதனால் மீளமுடியாத ஒரு கடன் சுழலுக்குள் சிக்குகின்றனர். வாழ்க்கை முழுவதும் கடன்களுடன் வாழவேண்டிய நிர்பந்தத்திற்குள் தள்ளப்படுகிறார்கள். கூட்டுறவு மற்றும் சிறு குழுக்கள் செயற்படும் இடங்களில் அவற்றுக்கூடாக செய்யப்படும் சிறிய சேமிப்புகளும், அதை அடிப்படையாக வைத்து வழங்கப்படும் கடன்களும் முற்றாக கடன்சுழலுக்குள் மூழ்கிவிடாமல் மக்களை தற்காலிகமாக பாதுகாக்கின்றன. ஆனால் இப்படியே எத்தனை காலங்களுக்கு தொடரமுடியும்?

**எதிர்காலம்**

காலத்திற்கு காலம் நெருக்கடிகள் ஏற்படும்போது குடும்பங்கள் தங்களின் வாழ்வாதாரங்களை இழப்பதும், கடன் பொறிக்குள் சிக்குவதும் மீண்டும் மீண்டும் ஏற்படுகின்றது. வாழ்வாதார வாய்ப்புகள் குறைவடையும்போது உணவா? கல்வியா? என்ற தெரிவுக்கு நடுவில் மக்கள் திண்டாடுகின்றனர். இது நீண்டகாலத்தில் சமூக பொருளாதார அபிவிருத்தியில் பாரிய தாக்கத்தை செலுத்தும். இந்தச் சூழலில் சமூகப் பாதுகாப்புக்கான திட்டங்கள் முக்கியத்துவமானவையாக இருக்கின்றன.

சமூகப் பாதுகாப்பு என்பதில் உணவு, உறையுள், கல்வி, மருத்துவம் என்பவற்றுடன் கிராமப்புற அபிவிருத்திக்குப் பொருத்தமான வாழ்வாதாரங்கள், கடன் மற்றும் சந்தைப்படுத்தல் வாய்ப்புகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். யுத்தம் நிறைவடைந்தவுடன் அதற்கான ஒரு தேவை காணப்பட்டபோதும் அரசிடம் கிராமப்புற வாழ்வாதார அபிவிருத்திக்கான நிலையான அபிவிருத்தித் திட்டம் இருக்கவில்லை. தற்போதைய நெருக்கடியுடன் கிராமப்புற பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான கொள்ளைகளை உருவாக்குவதற்கான ஒரு வாய்ப்பு மீண்டும் உருவாகியுள்ளது. இந்தச் சூழலில் கடந்த ஜூன் முதலாம் திகதி ஜனாதிபதி ஆற்றிய 2048ஆம் ஆண்டை நோக்கிய அபிவிருத்தி திட்டமிடல் தொடர்பான உரையில் இவை கவனத்தில் கொள்ளப்படாமல் இருப்பது அரசாங்கத்தின் அஜாக்கிரதையாகப் பார்க்கப்படவேண்டி உள்ளது. தமக்கான அபிவிருத்தி என்னவாக இருக்க வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். ●

# சிங்கள - பௌத்த பேரினவாதம் எமது உணர்வை புரியவேண்டும்

## சுகாஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜுலை 03

தையிட்டியில் அமைந்துள்ள சட்ட விரோதமான திஸ்ஸ விகாரைக்கு எதிரான தொடர் போராட்டம் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. எமது உணர்வுகளுக்கு மேலும் சுமையும் துன்பங்களும் ஏற்படுத்துகின்ற வகையில் இந்த சிங்கள - பௌத்த பேரினவாதம் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது என்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

நேற்று காங்கேசன்துறை திஸ்ஸ விகாரைக்கு அருகாமையில் போராட்டத்தில் ஈடுபட்ட வேளை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கவில்லையே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்களுடைய தொடர் போராட்டத்துக்கு சாதகமான பதில் இற்றைவரை பொறுப்பு வாய்ந்த எவரிடம் இருந்தும் எமக்கு கிடைக்கவில்லை. எனவே, நமக்கு வேறு மாற்றங்களோ வேறு உபாயங்களோ கிடையாது.

நாங்கள் மீண்டும் வலியுறுத்துகின்ற விடயம், சிங்கள மக்களையோ பௌத்த மதத்தையோ நாங்கள் வெறுக்கவில்லை. பௌத்தத்தை நாங்கள் நேசிக்கின்றோம் சிங்கள மக்களை நாங்கள் விரும்புகின்றோம்.

அவர்களுடைய உணர்வுகளை புரிந்து கொள்கின்றோம். நாங்கள் தாழ்மையாக கேட்பது, நாங்கள் எவ்வாறு உங்களை மதிக்கின்றோமோ, உங்களது உணர்வுகளை புண்படுத்தாது செயல்படுகின்றோமோ அதேபோல் நீங்களும் நடந்து கொள்ளுங்கள்.

சிங்கள மக்களே நீங்கள், சட்டவிரோத கட்டடங்களை அகற்றுமாறு அரசுக்கு அழுத்தத்தை கொடுங்கள். ஏனென்றால் தமிழ் மக்கள் எந்த சந்தர்ப்பத்திலும் சிங்கள சகோதரர்களுடைய, பௌத்த மதத்தவர்களுடைய வாழிடத்தை அழித்து அங்கே நாங்கள் எங்களது அடையாளங்களை பதிக்கவில்லை. பதிக்கப் போவதும் இல்லை. ஏனென்றால் நாங்கள் சிங்கள மக்களையும் விரும்புகின்றோம், பௌத்த மத போதனைகளையும் விரும்புகின்றோம். ஆனால் இங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பது புத்த பகவானுடைய அருமையான பௌத்த கோட்பாடுகளும் மீறப்பட்டு, அகிம்சைக்கு முரணாக இராணுவமும் சிங்கள பௌத்த பேரினவாதமும் தமிழ் மக்களுடைய காணிகளை ஆக்கிரமித்து ஒரு சட்ட விரோதமான கட்டடத்தை இங்கே கட்டி இருக்கின்றார்கள்.

அதற்கு எதிராகத்தான் நாங்கள் தொடர்ந்து போராடி வருகின்றோம். இந்த சட்ட விரோத கட்டடம் அகற்றப்படும் வரை எங்களது போராட்டம் தொடர்ந்து பல்வேறு வடிவங்களில் தொடரும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# ஆசிரியர் சேவையில் 5 ஆயிரம் வெற்றிடங்கள்

கொழும்பு, ஜுலை 03

வடமேல் மாகாணத்தில் 697 அதிபர் வெற்றிடங்களும் 5,098 ஆசிரியர் வெற்றிடங்களும் காணப்படுகின்றன என்று அதிபர் சேவைகள் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சிசிர ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

குருநாகல் மற்றும் புத்தளம் ஆகிய இரண்டு மாவட்டங்களில் 8 கல்வி வலயங்களிலும் 31 பிரிவுகளிலும் இந்த வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஆள்சேர்ப்பு நடைபெற்று மூன்று வருடங்கள் கடந்துள்ள போதிலும் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு போட்டிப் பரீட்சைகள் நடத்தப்படவில்லை எனவும், உடனடியாக ஆள்சேர்ப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# 'அகதியின் பேர்ளின் வாசல்' வரலாற்றுப் புதினம்




ஆசி. கந்தராஜாவின் "அகதியின் பேர்ளின் வாசல்" நாவல் சமீபத்தில் யாழ்ப்பாணம் "எங்கட புத்தகங்கள்" பதிப்பகத்தின் வெளியீடாக வெளி வந்துள்ளது. இன வன்முறைகளாலும் ஆயுதப் போராட்டங்களாலும் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களின் அவலம் நிறைந்த கால கட்டத்தை ஊடறுத்துச் செல்லும் இந்த நாவல் அகதிகளாக புலம் பெயர்தலின் ரணங்களை மட்டும் கூறவில்லை. சமாந்திர நகர்வுகளாக இரண்டாம் உலகப் போரும் அதன்பின்னர் உருவாக்கப்பட்ட "பொட்ஸ்டம்" உடன்படிக்கையும் அகதிகளுக்கான இறங்கு துறையாக கிழக்குபேர்ளினை எவ்வாறு களமாக்கின என்பதை யும், அதன் பின்னணியில் ஆதிக்க நாடுகளின் பனிப் போர்களை யும் சதிமுயற்சிகளையும் சித்திரிக்கிறது.

மரணபயம் கொண்டு புகலிடம் கோரியோரைவிட பொருளாதார அகதிகளுக்கே பிளவுபட்ட கிழக்கு, மேற்கு பேர்ளினின் பூகோள அமைப்பும் அரசியலும் பெரு வாய்ப்பாக அமைந்தன.

புலம்பெயர்வு என்னும் பேரலையில் சிக்குண்ட இலங்கைத் தமிழர்கள் பெற்றவைகளும் இழந்தவைகளும் ஏராளம். கடந்த காலத்தின் சுவடுகளாகவும் நிகழ்காலத்தின் நீட்சியாகவும் படைக்கப்பட்ட இவ் வரலாறு சார்ந்த புதினம், எதிர்காலத்தில் ஆவணமாகும் தகுதி பெற்றது.

கல்விமானும் வாசக ஈர்ப்பும் கொண்ட சிறந்த எழுத்தாளரான ஆசி. கந்தராஜாவின் 13 வருட கிழக்கு , மேற்கு பேர்ளின் வாழ்க்கை படைப்பின் நேர்த்திக்கு சான்று கூறுகிறது. மிகைப் படுத்தல்களும் - திரிபுபடுத்தல்களும் இல்லாது வரலாற்றை அடியொற்றி எழுதிய இந்த நாவல் புலம்பெயர்வு என்ற முக்கிய காலகட்டத்தின் குறுக்கு வெட்டுமுகம் எனலாம்.

**- ரஞ்ஜனி சுப்ரமணியம்**






# திருமலை விபத்துக்களில் 8 பேர் படுகாயமடைந்தனர்

## யாழ். இளைஞர் இரு கால்களையும் இழந்தார்




**திருகோணமலை, ஜூலை 03**

**திருகோணமலையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற மூன்று வெவ்வேறு விபத்துகளில் 8 பேர் காயமடைந்து மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.**

யாழ்ப்பாணத்திலிருந்து- கதிர்காமத்துக்கு சுற்றுலா சென்ற பேருந்து ஒன்று மொரவேவை பகுதியில் விபத்துக்குள்ளானது. இதில், பேருந்தில் பயணித்த யாழ்ப்பாணம் - உரும்பிராயை சேர்ந்த இளைஞர் ஒருவர் இரு கால்களையும் இழந்தார்.

இதேவேளை மஹதிவுல்வெவ விகாரையில் கலை நிகழ்வு ஒன்றில் பங்கேற்றபின்னர் வீட்டுக்கு நடந்து சென்றவர்களை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் ஐவர் காயமடைந்தனர்.

இதேபகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தவர்களை வேறொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் இருவர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (ஐ)



# 41 இளைஞர், யுவதிகளுக்கு கௌரவிப்பும் ஊக்குவிப்பும்

மட்டக்களப்பு, ஜூலை 03

அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தால் மட்டக்களப்பு - வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவில் 41 இளைஞர், யுவதிகளுக்கு தொழில் முனைவோருக்கு ஊக்கத் தொகை வழங்கப்பட்டது.

ஒருங்கிணைந்த பல்வேறு திட்ட அமுலாக்கங்களுக்குள் உள்வாங்கப்பட்ட இளைஞர், யுவதிகளில் தமது ஆற்றல்களை வெளிப்படுத்திச் செயல்பட்டவர்களை பாராட்டி தலா 30 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கரடியின் தாக்குதலில் மூன்றுபேர் படுகாயம்!

திருகோணமலை, ஜூலை 03

தேன் எடுப்பதற்காக காட்டுக்கு சென்ற மூவர் கரடியின் தாக்குதலில் படுகாயமடைந்து திருகோணமலை பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குமரன்கடவை வனப்பகுதிக்குள் தேன் எடுக்கச் சென்றவர்களே இவ்வாறு கரடியின் தாக்குதலில் காயமடைந்தனர்.

இவர்கள் மூவரும் தற்போது திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குமரன்கடவை - பக்மீகம பகுதியைச் சேர்ந்த 29, 38 மற்றும் 46 வயதுடைய மூவரே கரடி தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். (ஐ)

# போதைப் பொருட்களுடன் தந்தை, மகனுடன் மூவர் கைது!

காத்தான்குடி, ஜூலை 03

ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட தந்தையையும் மகனையும் கைது செய்ததுடன், மற்றொருவரை ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ. எம். எஸ். ஏ. றஹீம் தெரிவித்தார்.



குற்றப்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி றஹீம் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் நடத்திய திடீர் சுற்றி வளைப்பிலேயே இவர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர்.

புதிய காத்தான்குடி பேருந்து சாலை வீதியில் 2,120 மில்லி கிராம் ஹெரோயினுடன் தந்தையும் 40 மில்லி கிராம் ஹெரோயினுடன் மகனும் கைது செய்யப்பட்டனர்.

இதே வேளை கர்பலா பள்ளிவாசல் அருகில் 2,960 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் 35 வயது நபரொருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதான மூவரும் காத்தான்குடியைச் சேர்ந்தவர்கள் எனவும் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் இவர்களை முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# குருக்கள்மடம் கலைவாணி வித்தி. காணிகளை விடுவிக்க நடவடிக்கை

மட்டக்களப்பு, ஜூலை 03

குருக்கள்மடம் கலைவாணி வித்தியாலயத்தை இராணுவ பிடியிலிருந்து விடுவிப்பது தொடர்பில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் குருக்கள்மடம் கலைவாணி வித்தியாலயத்தின் கட்டடங்கள் மைதானம் என்பன இராணுவத்தின் பிடியில் உள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டது. இது தொடர்பில் அறிக்கை தருமாறு ஆளுநர் கேட்டிருந்தார்.



இதையடுத்து இந்த விடயத்தை அங்கு சுட்டிக்காட்டிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் நேற்று அந்தப் பகுதிக்கு சென்றார். இதன்போது, கல்வித்துறை சார் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இதன்போது, பாடசாலையின் 2.9 ஏக்கர் காணியுடன் மேலதிகமாக 5 ஏக்கர் காணியையும் இராணுவம் பயன்படுத்துகிறது என்று அறியப்பட்டது. இது தொடர்பான அறிக்கையை தயாரித்து மாவட்ட அபிவிருத்திக் குழுவிடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அம்பாறையில் சுற்றுலா பாடசாலை அமைக்குமாறு அமைச்சர் பணிப்பு

அக்கரைப்பற்று, ஜூலை 03

அம்பாறை மாவட்டத்தில் சுற்றுலா பாடசாலை ஒன்றை அமைக்குமாறு சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ கிழக்கு மாகாண உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவு விடுத்துள்ளார்.

அறுகம் குடாவுக்கு ஆய்வுச் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்த போதே இந்த விடயத்தை சுட்டிக்காட்டினார்.

பயிற்சி பெற்ற நட்சத்திர விருந்தகங்களுக்கான ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் அதிகரித்து வரும் தேவையை, உள்ளூரில் மட்டுமல்லாது, இலங்கை முழுவதும் இந்த திட்டம் மூலம் பூர்த்தி செய்ய முடியும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போது நாடளாவிய ரீதியில் சுற்றுலாத்துறை சார்ந்த 3 ஆயிரம் பணி வெற்றிடங்கள் காணப்படுகிறது. இதற்கான தீர்வை உடனடியாக பெற்று நாட்டின் சுற்றுலாத்துறையை சிறந்த நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும் எனவும் சுட்டிக் காட்டினார்.

மேலும், கிழக்கு மாகாணத்தை நாட்டின் சிறந்த சுற்றுலா தலமாக மாற்றியமைப்பதற்கான ஏற்பாடுகள் விரைவில் முன்னெடுக்கப்படும் எனவும் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், அறுகம் குடாவில் கடல் விமானம் தரையிறங்கும் கப்பல்துறையை நிர்மாணிப்பதற்கான மதிப்பீட்டை வழங்குமாறு பிரதேச செயலாளருக்கு பணிப்புரை விடுத்ததோடு, கடல் விமான நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்றும் அமைச்சர் இதன் போது தெரிவித்தார். (ஐ)

# புலம்பெயர் தமிழரிடம் ஜனாதிபதி மன்னிப்புக் கேட்க வேண்டும்!

## சாணக்கியன் எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 03

புலம் பெயர்ந்த தமிழரிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மன்னிப்பு கோரவேண்டுமென இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான பாராளுமன்ற விவாதத்தில் கலந்துகொண்டு ஆற்றிய உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரான்ஸ் நாட்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கும் போது அங்குள்ள புலம்பெயர் தமிழர் ஒருவர் ஆங்கிலத்தில் வைத்து எமது இன அழிப்பு பற்றிய கேள்விக்கு விடையளிக்க விரும்பாமல் தனக்கு விளங்கவில்லை ஆங்கிலம் தெரியாவிடின் தமிழில் கதைக்கும்படியும் கூறியிருந்தார்.

ஆங்கிலம் தெரியாவிடின் அது ஓர் பெரும்குற்றம் போல் சாடியிருந்தார். அந்த புலம்பெயந்தவர் ரணில் விக்கிரமசிங்க 80களில் அமைச்சரவை அமைச்சராக இருந்த காலத்தில் அச்சுறுத்தல் காரணமாக விரட்டி அடிக்கப்பட்டு புலம்பெயர்ந்து இருக்கலாம்.

ஜனாதிபதியின் இந்த கருத்து தொடர்பில் புலம்பெயர் தேசத்தவரிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என வலியுறுத்துகின்றோம். ஆங்கிலம் என்பது வெறும் மொழிஅறிவு அல்ல என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# சூடான் உள்நாட்டு மோதலால் 26 இலட்சம் மக்கள் இடப்பெயர்வு

**ஐ. நா. சபை தெரிவிப்பு**

நியூயோர்க், ஜுலை 03

**சூடானில் இராணுவத்துக்கும் துணை இராணுவப் படையினருக்கும் கடந்த இரண்டரை மாதங்களாக நடைபெறும் மோதலால் பொதுமக்கள் 26 இலட்சம் பேர் இடம்பெயர்ந்து தவித்து வருகின்றனர் என்று ஐ. நா. அமைப்பு தெரிவித்துள்ளது.**



இது குறித்து ஐ.நா.வின் நிவாரணப் பணிகள் ஒருங்கிணைப்பு அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில், இடம்பெயர்ந்தவர்கள் 5.6 இலட்சம் பேர் சர்வதேச அகதிகளாகியுள்ளனர். இவர்கள், அயல் நாடுகளான எகிப்து, சாட் போன்ற நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

வடக்கு ஆபிரிக்க நாடான சூடானில் அப்தெல் பட்டா அல்-புர்ஹான் தலைமையிலான இராணுவத்துக்கும், முகமது ஹம்தான் டகாலோ தலைமையிலான துணை ராணுவப் படைக்கும் இடையே அதிகாரப் போட்டி காரணமாக கடந்த ஏப்ரல் 15ஆம் திகதி முதல் சண்டை நடந்து வருகிறது.

இந்த மோதலில் இதுவரை 3 ஆயிரத்திலிருந்து 5 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர் என்றும் கருதப்படுகின்றது.

(ஐ)

# ஆபாச படங்களை சிறார் பார்ப்பதை தடுக்க பிரிட்டனில் விசேட சட்டம்!

லண்டன், ஜுலை 03

ஆபாச படங்களை சிறார் பார்ப்பதைத் தடுக்கும் வகையில் ஒன்லைன் பாதுகாப்பு சட்டத்தை கெடுபிடிகளுடன் வடிவமைத்துள்ளதாக பிரிட்டன் அரசு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், ஒன்லைன் பாதுகாப்புச் சட்டத் திருத்தத்தில் அண்மைத் திருத்தத்தில், பாலுறவு சார்ந்த இணையதளங்களை அணுகுவோரின் வயதை அறியும் முறைகளை உயர்தரமானதாக வடிவமைக்க தொழில்நுட்ப நிறுவனங்களை வலியுறுத்த வழிவகை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இதன் மூலம் அத்தகைய இணையதளங்களை அணுகுவோரின் சில தகவல்களைப் பெற்று, அது உண்மையிலேயே வயது வந்தநபரா அல்லது சிறாரா என்பதை உறுதி செய்ய வேண்டிய கட்டாயம் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு உருவாகும்.

ஐரோப்பிய ஒன்றியத்தில் உள்ள நாடுகளைப்போல் பிரிட்டனும் சமூக வலைதளப் பயனர்களை குறிப்பாக, சிறுவர்களை வெறுக்கத்தக்க அருவருக்கத்தக்க கருத்துகளில் தவிர்ப்பதற்கு திணறி வருகிறது என்ற விமர்சனங்களை அந்நாட்டு அரசு எதிர்கொண்டு வருகிறது.

கருத்து சுதந்திரத்தை மீறாமல் அருவருக்கத்தக்க ஆபாச கருத்துகளில் இருந்து சிறுவர்களை விலக்கி வைக்க வேண்டும் என்பதால் பல்வேறு சிக்கல்களையும் எதிர்கொண்டு சட்டத்தை வகுக்க காலம் எடுத்துக் கொள்வதாக பிரிட்டன் அரசு விளக்கி வருகிறது.

இந்த நிலையிலேயே ஒன்லைன் தளங்களை சிறுவர்களுக்கு பாதுகாப்பானதாக மாற்ற பிரிட்டன் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

(ஐ)



# பிரான்ஸில் தொடரும் வன்முறை 2400இற்கும் மேற்பட்டோர் கைது!

பாரிஸ், ஜுலை 03

பிரான்ஸில் பொலிஸாரால் 17 வயது இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து அந்த நாட்டில் தொடர்ந்து கலவரம் நீடித்து வருகிறது.

வன்முறை மற்றும் சூறையாடல் சம்பவங்கள் தொடர்பாக இதுவரை 1,300இற்கும் மேற்பட்டவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:

போராட்டக்காரர்கள் சாலையில் தடுப்புகளை ஏற்படுத்துதல், கார்களுக்குத் தீவைத்தல், சூறையாடுதல் போன்ற கலவரச் செயல்களில் ஈடுபட்டனர்.

வன்முறையை கட்டுப்படுத்துவதற்காக பதற்றப் பகுதிகளில் குவிக்கப்பட்ட பொலிஸாரின் எண்ணிக்கை 45 ஆயிரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதனையும் மீறி வன்முறைகள் தொடர்கின்றன.

இந்தக் கலவர சம்பவங்கள் தொடர்பாக இதுவரை 1,311 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். வன்முறைச் சம்பவங்களில் சுமார் 200 பொலிஸார் காயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

முன்னதாக, வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவதற்கு சமூக ஊடகங்கள் முக்கிய காரணமாக இருப்பதாக பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவல் மக்ரோன் கூறினார்.

மேலும், இந்தப் போராட்டத்தில் சிறார்கள் ஈடுபடுவதைத் தவிர்ப்பதற்காக பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை வீட்டிலேயே வைத்திருக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

(ஐ)

# உக்ரைனின் எதிர் தாக்குதலால் அதிகளவு உயிரிழப்பு ஏற்படும்!

**அமெரிக்க இராணுவத் தளபதி**



வாஷிங்டன், ஜுலை 03

ரஷ்ய ஆக்கிரமிப்புப் பகுதிகளை மீட்பதற்காக உக்ரைன் நடத்தும் எதிர்த் தாக்குதல் மிக நீண்ட காலம் பிடிக்கும். இந்த நடவடிக்கையில் அதிக உயிரிழப்பு ஏற்படும் என்று அமெரிக்க இராணுவ தலைமை தளபதி ஜெனரல் மார்க் மில்லி தெரிவித்துள்ளார்.

இது குறித்து, வாஷிங்டன் நகரில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் தெரிவித்தவை வருமாறு,

ரஷ்ய ஆக்கிரமிப்புப் பகுதிகளை மீட்பதற்கான உக்ரைனின் நடவடிக்கைகள் எதிர்பார்த்ததை விட மிகவும் மந்தமாக இருப்பதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. இது போரின் இயல்பே ஆகும். எதிர்த் தாக்குதல் மந்தமாக இருந்தாலும், அந்த நடவடிக்கையில் உக்ரைன் ஸ்திரமான முன்னேற்றத்தை கண்டு வருகிறது.

சவால்கள் நிறைந்த, கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டுள்ள நிலப் பகுதியை உக்ரைன் இராணுவம் மிகவும் கவனமாகக் கடந்து முன்னேறி வருகிறது. நாளொன்றுக்கு 100 மீற்றர், 1,000 மீற்றர் என்ற கணக்கில் அந்த நாட்டுப் படை நகர்ந்து வருகிறது. இப்போது நடைபெறுவது நிஜமான போர். இதில் உயிரிழப்புகளும் மிக அதிகமாக இருக்கும். அது குறித்து நாம் குறைத்து மதிப்பிடக்கூடாது - என்றார்.

(ஐ)

# உலகின் மிகப்பழைய நாளிதழ் வெளியீட்டை நிறுத்தியது!




வியன்னா, ஜுலை 03

உலகிலேயே மிகப் பழைமையான நாளிதழ் என்ற பெருமையைப் பெற்ற ஆஸ்திரியாவின் - வியன்னாவைச் சேர்ந்த வீனட் செய்துங் என்ற நாளிதழ் கடந்த வெள்ளிக்கிழமையுடன் வெளியீட்டை நிறுத்திவிட்டது.

கிட்டத்தட்ட 320 ஆண்டுகள் தொடர்ந்து நாளிதழை வெளியிட்டு வந்த அரசுக்குச் சொந்தமான வீனட் செய்துங் நாளிதழ் நிறுவனம், நிதி நெருக்கடி காரணமாக, வருவாய் இழப்பை சந்தித்து நாளிதழ் வெளியீட்டையே நிறுத்திவிட்டுள்ளது.

வீனட் செய்துங் வெளியீட்டின் கடைசி நாளான வெள்ளிக்கிழமை, தனது நாளிதழின் முகப்புப் பக்கத்தில், 116,840 நாள்கள், 3,839 மாதங்கள், 320 ஆண்டுகள், 12 அதிபர்கள், 2 குடியரசுகள், 1 நாளிதழ் என தனது இதழுக்கு தானே இறுதி அஞ்சலி செலுத்திக் கொண்டது.

வீனட் செய்துங் முகப்புப் பக்கம், ருவிற்றர் பக்கத்தில் பகிரப்பட்டு, தி வீனட் செய்துங் உலகின் மிகப் பழைமையான நாளிதழ் தனது கடைசி இதழை வெளியிட்டுள்ளது. இதுதான் இந்த நாளிதழின் கடைசி முகப்புப் பக்கம் என்று பதிவிடப்பட்டிருந்தது.

இதற்கு வியன்னாவை சேர்ந்த ஏராளமான மக்கள் தங்களது வருத்தத்தைப் பதிவு செய்து வருகின்றனர்.

(ஐ)

# கட்டுப்பாட்டை இழந்து ஓடிய பாரவூர்தியால் 52 பேர் பலி!

நைரோபி, ஜுலை 03

கென்யாவில் கட்டுப்பாட்டை இழந்து ஓடிய பாரவூர்தி, வாகனங்கள் மற்றும் வீதியோர வியாபாரிகள் மீதும் 52 பேர் உயிரிழந்தனர்.

தலைநகர் நைரோபிக்கு 125 கி.மீ. தொலைவில் உள்ள ரிப்ட் பள்ளத்தாக்கு பிரதேச நகரமான லோண்டியானியில் இந்த விபத்து ஏற்பட்டது.

இது குறித்து அதிகாரிகள் கூறியவை வருமாறு,

ஏரிக்கரை நகரங்களான நாகுரு, கெரிச்சோ ஆகியவற்றுக்கு இடையே சென்று கொண்டிருந்த பாரவூர்தி, லோண்டியானியாவில் அடிக்கடி விபத்துகளைச் சந்தித்து வரும் ஒரு சாலை வளைவை இரவு கடந்தபோது தறிகெட்டு ஓடியது.

வாகனங்களையும், வீதியோரத்தில் நின்ற வியாபாரிகளையும் அது மோதித் தள்ளி தலைகீழாகக் கவிழ்ந்தது. இந்த விபத்தில் 52 பேர் பலியாகினர். 32 பேர் காயங்களுக்கு உள்ளாகினர். இதில், பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. கனமழையால் மீட்பு பணி மந்த கதியிலேயே நடந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ)

ஈழநாடு



## ஒருநாள் உலகக் கிண்ணம்:

# முதன்முறையாக வாய்ப்பை இழந்தது மேற்கிந்திய தீவுகள்



ஹராரே, ஜூலை 03

ஐ. சி. சி. ஒருநாள் கிரிக்கெட் உலகக்கிண்ணத் தொடரில் முதன் முறையாக பங்கேற்கும் வாய்ப்பை இழந்துள்ளது இரு முறை சம்பியனான மேற்கிந்தியத் தீவுகள் அணி.

ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடர் எதிர் வரும் ஒக்ரோபர் 5ஆம் திகதி இந்தியாவில் தொடங்குகிறது. இதில், கலந்துகொள்ள இந்தியா உட்பட 8 அணிகள் நேரடியாக ஏற்கெனவே தகுதி பெற்றிருந்தன. மீதம் உள்ள இரு அணிகளை தெரிவு செய்வதற்கான தகுதி சுற்று ஆட்டம் சிம்பாப்வேயில் நடத்தப்பட்டு வருகிறது. இதில், 10 அணிகள் பங்கேற்றன. லீக் சுற்றின் முடிவில் ஏ பிரிவில் இருந்து சிம்பாப்வே, நெதர்லாந்து, மேற்கு இந்தியத் தீவுகள் ஆகிய அணிகளும் ‘பி’ பிரிவில் இருந்து இலங்கை, ஸ்கொட்லாந்து, ஓமன் அணிகளும் சூப்பர் 6 சுற்றுக்கு முன்னேறின.

லீக் சுற்றில் குவித்த வெற்றிகளின் அடிப்படையில் சிம்பாப்வே, இலங்கை அணிகள் போனஸாக தலா 4 புள்ளிகளுடன் சுப்பர்6 சுற்றில் களமிறங்கின. மேற்கிந்தியத் தீவுகள் அணியானது சிம்பாப்வே, நெதர்லாந்திடம் தோல்வி அடைந்ததால் புள்ளிகள் ஏதுமின்றி களமிறங்கியது. இதனால் சுப்பர் 6 சுற்றில் அனைத்து போட்டிகளிலும் வெற்றி பெற்றாலும் உலகக் கிண்ணத் தொடருக்கு மேற்கிந்தியத் தீவுகள் தகுதி பெறுவது சந்தேகம் என்ற சூழல் உருவானது.

இந்நிலையில் ஹராரே நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுப்பர் 6 சுற்றில் மேற்கிந்தியத் தீவுகள், ஸ்கொட்லாந்தை எதிர்கொண்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணியானது 43.5 ஓவர்களில் 181 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக ஜசன் ஹோல்டர் 45, ரொமேரியோ ஷெப்பர்ட் 36, பிரண்டன் கிங் 22, நிக்கோலஸ் பூரன் 21, அணித் தலைவர் ஷாய் ஹோப் 13 ஓட்டங்கள் சேர்த்தனர். ஸ்கொட்லாந்து அணி தரப்பில் பிரண்டன் மெக்முல்லன் 3 விக்கெட்களையும் கிறிஸ் சோல், மார்க் வாட், கிறிஸ் க்ரீவ்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

182 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய செய்த ஸ்கொட்லாந்து அணி 43.4 ஓவர்களில் 3 விக்கெட்கள் இழப்புக்கு 185 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக ஸ்கொட்லாந்து வெற்றி பெறுவது இதுவே முதன்முறையாகும். அதிகபட்சமாக மத்யூஸ் கிராஸ் 74, பிரண்டன் மெக்முல்லன் 69 ஓட்டங்கள் விளாசினர்.

7 விக்கெட்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்த மேற்கிந்தியத் தீவுகள் அணியானது உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்பை இழந்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு இந்தத் தொடரில் இன்னும் இரு போட்டிகள் உள்ளன. இந்த இரு ஆட்டங்களிலும்வெற்றி பெற்றாலும் 4 புள்ளிகளை மட்டுமே அடைய முடியும். அதேவேளையில் இலங்கை, சிம்பாப்வே அணிகள் ஏற்கெனவே 6 புள்ளிகளை பெற்றுள்ளன. இந்த இரு அணிகளே முதல் இரு இடங்களை பிடித்து உலகக் கிண்ணத் தொடருக்கு தகுதி பெறக்கூடும்.

---

## காயத்துடன் களம் கண்ட நதன் எழுந்து மதிப்பளித்த ரசிகர்கள்!



லோர்ட்ஸ், ஜூலை 03

ஆஷஷ் தொடரில் இங்கிலாந்து அணிக்கு எதிரான இரண்டாவது போட்டியில் காயம்பட்ட நிலையிலும் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நதன் லயனின் செயல் பாராட்டுகளை பெற்றுவருகிறது.

லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வரும் இந்த போட்டி அவுஸ்திரேலியாவின் மற்ற வீரர்களைவிட சுழல்பந்து வீச்சாளர் நதன் லயனுக்கு சிறப்பு வாய்ந்த போட்டி. இந்தப் போட்டியில் பங்கேற்றதன் மூலம் தொடர்ச்சியாக 100 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்ற முதல் பந்துவீச்சாளர் என்ற சிறப்பை பெற்றுள்ளார்.

ஆனால், போட்டியின் இரண்டாம் நாளில் எதிர்பாராதவிதமாக இங்கிலாந்து அணி வீரர்கள் அடித்த பௌண்ட்ரியை தடுக்கும் முயற்சியில் நதன் லயனுக்கு காலில் பலத்த காயம் ஏற்பட்டது. அவரால் அதன் பிறகு ஆட முடியவில்லை.

மூன்றாம் நாளில் ஊன்றுகோலுடன் இருந்த அவர், யாரும் எதிர்பாராத வகையில் நான்காம் நாளில் காயத்தையும் பொருட்படுத்தாமல் துடுப்பெடுத்தாடக் களமிறங்கினார். வலியுடன் அவர் களத்துக்கு வரும்போது மொத்த மைதானமும் அவரை எழுந்துநின்று பாராட்டியது. இந்தக் காணொலி காட்சிகள் வைரலாகி வருகிறது. 9ஆவது விக்கெட்டுக்கு களம்புகுந்த லயன், கிட்டத்தட்ட ஐந்து ஓவர் வரை களத்தில் இருந்தார். 13 பந்துகளைச் சந்தித்த அவர் ஒரு பௌண்ட்ரி அடித்து கடைசி விக்கெட்டாக வீழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

---

## நெதர்லாந்து அணியை வீழ்த்தியது இலங்கை!



புலவாயோ, ஜூலை 03

ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதி சுற்றில் நெதர்லாந்து அணிக்கு எதிரான ஆட்டத்தில் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது இலங்கை அணி.

ஒருநாள் கிரிக்கெட் உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதி சுற்று தொடர் சிம்பாப்வேயில் நடைபெற்று வருகிறது. இதன் சுப்பர் 6 சுற்றில் நேற்று புலவாயோ நகரில் இலங்கை - நெதர்லாந்து அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 47.4 ஓவர்களில் 213 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. ஒரு கட்டத்தில் இலங்கை 67 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்களை இழந்து தடுமாறியது.

அந்த நிலையில் களமிறங்கிய தனஞ்சய டி சில்வா 111 பந்துகளில், 2 சிக்ஸர்கள், 8 பௌண்ட்ரிகளுடன் 93 ஓட்டங்கள் விளாசியதால் இலங்கை அணியால் கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற முடிந்தது. திமுத் கருணரத்ன 33, தீக்ஷனா 28, வனிந்து ஹசரங்க 20 ஓட்டங்கள் சேர்த்தனர்.

நெதர்லாந்து தரப்பில் லோகன் வான் பீக், பாஸ் டி லீடி ஆகியோர் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

214 ஓட்டங்கள் இலக்குடன் துடுப்பெடுத்தாடிய நெதர்லாந்து அணியானது 40 ஓவர்களில் 192 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது.

அதிகபட்சமாக ஸ்கொட் எட்வர்ட்ஸ் 67, வெஸ்லி பார்ரெஸி 52, பாஸ் டி லீடி 41 ஓட்டங்கள் சேர்த்தனர்.

இலங்கை அணி தரப்பில் தீக்ஷன 3, வனிந்து ஹசரங்க 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இலங்கை அணி 2 புள்ளிகளை பெற்றது. (ஐ)

---




## இங்கிலாந்துக்கு 371 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயித்தது ஆஸி.!

லோர்ட்ஸ், ஜூலை 03

ஆஷஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து அணிக்கு 371 ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயித்துள்ளது அவுஸ்திரேலிய அணி.

லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்று வரும் இந்த போட்டியில் முதல் இன்னிங்ஸில் அவுஸ்திரேலிய அணி 416 ஓட்டங்களும் இங்கிலாந்து அணி 325 ஓட்டங்களும் எடுத்தன. 91 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை விளையாடிய அவுஸ்திரேலிய அணி 3ஆவது நாள் ஆட்டத்தின் முடிவில் 45.4 ஓவர்களில் 2 விக்கெட்கள் இழப்புக்கு 130 ஓட்டங்கள் எடுத்தது. டேவிட் வோர்ணர் 25, மார்னஷ் லபுஷான் 30 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். உஸ்மான் கவாஜா 58, ஸ்ரீவ் ஸ்மித் 6 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

நேற்றுமுன்தினம் 4ஆவது நாள் ஆட்டத்தை தொடர்ந்து விளையாடிய அவுஸ்திரேலிய அணி 101.5 ஓவர்களில் 279 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. உஸ்மான் கவாஜா 187 பந்துகளில், 12 பௌண்ட்ரிகளுடன் 77 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஸ்ருவர்ட் பிரொட் பந்தில் ஆட்டமிழந்தார். ஸ்ரீவ் ஸ்மித் 34 ஓட்டங்களில் ஜோஷ் டங் பந்தில் வெளியேறினார். டிராவிஸ் ஹெட் 7, கமரூன் கிறீன் 18, அலெக்ஸ் ஹேரி 21, பட் கம்மின்ஸ் 11, ஜோஷ் ஹசில்வூட் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர்.

காயத்தால் அவதிப்பட்ட நதன் லயன் களமிறங்கி, 13 பந்துகளை சந்தித்து 4 ஓட்டங்களை எடுத்த நிலையில் கடைசி வீரராக ஆட்டமிழந்தார். கடைசி விக்கெட்டுக்கு அவர், மிட்செல் மார்ஷுடன் இணைந்து 15 ஓட்டங்கள் சேர்த்தார்.

இங்கிலாந்து அணி சார்பில் ஸ்ருவர்ட் பிரொட் 4 விக்கெட்களையும் ஜோஷ் டங், ஒல்லி றொபின்சன் ஆகியோர் தலா 2 விக்கெட்களையும் அண்டர்சன், பென் ஸ்ரோக்ஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இதையடுத்து 371 ஓட்டங்கள் வெற்றி இலக்குடன் இங்கிலாந்து அணி துடுப்பெடுத்தாடத் தொடங்கியது.

---

## ஹம்பர்க் ஓப்பன் தொடர் விலகினார் ஸ்வியாரெக்!



பேட்ஹம்பர்க், ஜூலை 03

காய்ச்சல் காரணமாக பேட்ஹம்பர்க் ஓப்பன் ரென்னிஸ் தொடரிலிருந்து முன்னணி ரென்னிஸ் வீராங்கனையான இகா ஸ்வியாரெக் விலகியுள்ளார்.

போலந்து நாட்டைச் சேர்ந்த இகா ஸ்வியாரெக் அண்மையில் முடிவடைந்த பிரெஞ்சு ஓப்பன் கிராண்ட் ஸ்லாம் ரென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றிருந்தார்.

இந்நிலையில், அவர் ஜேர்மனியிலுள்ள பேட்ஹம்பர்க் நகரில் நடைபெற்று வந்த ஹம்பர்க் ரென்னிஸ் தொடரில் பங்கேற்று விளையாடி வந்தார்.

இந்நிலையில் காய்ச்சல் மற்றும் உணவு நஞ்சானமையால் தொடரிலிருந்து விலகுவதாக இகா ஸ்வியாரெக் அறிவித்துள்ளார். நேற்று முன்தினம் நடைபெறவிருந்த மகளிர் ஒற்றையர் அரையிறுதிப் போட்டியில் இத்தாலி வீராங்கனை லூசியா பிரான்செட்டியுடன் அவர் மோதவிருந்தார். ஸ்வியாரெக் விலகியமையால் இறுதிச் சுற்றுக்கு லூசியா முன்னேறியுள்ளார். (ஐ)

# சக்சுரின் யானை விசேட விமானம் மூலமாக தாய்லாந்து அனுப்பப்பட்டது

**கொழும்பு, ஜுலை 03**

**தாய்லாந்தில் இருந்து அன்பளிப்பாக பெறப்பட்ட 'சக்சுரின்' அல்லது 'முத்துராஜா' என்ற யானை நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை தாய்லாந்துக்கு கொண்டு செல்லப்பட்டது.**

**யானையை ஏற்றிய விமானம் நேற்று காலை 07.30 மணியளவில் தாய்லாந்து நோக்கிப் புறப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.**

தாய்லாந்தில் இருந்து வந்த விசேட விமானம் மூலம் யானை மீண்டும் தாய்லாந்துக்கு கொண்டு செல்லப்பட்டதாக விலங்கியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் திலக் பிரேமகாந்த தெரிவித்தார்.

தாய்லாந்தில் யானைக்கு அந்தநாட்டு கால்நடை மருத்துவர்களால் சிறப்பு சிகிச்சை வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்தில் இருந்து இந்த நாட்டுக்கு வந்த மூன்று கால்நடை மருத்துவர்கள், ஒரு யானைப் பண்ணையாளர் மற்றும் இரண்டு உதவியாளர்கள் இந்தப் பயணத்தில் பங்கேற்றனர்.

இந்த விமானத்துக்காக தயாரிக்கப்பட்ட விசேட கூண்டுடன் பழகுவதற்கு 'முத்துராஜா' யானைக்கு சுமார் ஒரு மாத காலம் பயிற்சியளிக்கப்பட்டது.




2001 ஆம் ஆண்டு தாய்லாந்து அரசாங்கம் "சக்சுரீன்" என்ற யானையை இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கியிருந்தது. ஆனால் இந்த யானையின் உடல் நிலை மோசமடைந்து வருவதால், அதனை தாய்லாந்துக்கு மீண்டும் அழைத்துச் செல்ல அந்நாட்டு அரசாங்கம் இலங்கையிடம் கோரிக்கை விடுத்திருந்ததமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வட்டியில்லாத கடன் திட்டம் மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்!

கொழும்பு, ஜுலை 02

வட்டியற்ற மாணவர் கடன் திட்டத்தின் 7ஆவது கட்டத்துக்காக விண்ணப்பிக்க நாளை செவ்வாய்க்கிழமை முதல் ஓகஸ்ட் 7ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய 2019/ 2020 / 2021 ஆம் ஆண்டுகளில் இலங்கை பரீட்சை திணைக்களத்தால் நடத்தப்பட்ட கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றி அதில் சித்தியடைந்த மாணவர்கள் இந்த கடனுக்கு விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்ப படிவத்தை www.studentloans.mohe.gov.lk என்ற இணையத் தளத்தில் பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு குறித்த கடன் தொடர்பான முழுமையான விபரங்களும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

070-355 5970/79 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து மேலதிக தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும் என்று கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# குளவி கொட்டியதில் 42 மாணவர்கள் பாதிப்பு

கண்டி, ஜுலை 03

கண்டிக்கு சுற்றுலா சென்ற ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்களை குளவி கொட்டியதில் 42 பேர் பாதிக்கப்பட்டனர்.

கண்டி ஹந்தானை பிரதேசத்தில் உள்ள மலை ஒன்றில் ஏறியவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டனர். நேற்று முன்தினம் மாலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குளவி கொட்டியதில் 15 மாணவிகளும் 27 மாணவர்களும் பாதிக்கப்பட்டனர். இவர்கள் உடனடியாக அம்புலன்ஸ் வாகனங்கள் மூலம் கண்டி போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த சுற்றுலாவில் 340 பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபட்டிருந்தனர் என்று தெரிய வருகின்றது. (ஐ)

# கடன் மறுசீரமைப்பு தொடர்பில் மக்களுக்கு தெளிவுபடுத்துங்கள்



## வீண் குழப்பத்தை தடுக்க இதுவே வழி என்கிறார் பொருளியல் நிபுணர்!

கொழும்பு, ஜுலை 03

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும். இல்லையேல் கடன் மறுசீரமைப்பு மக்களிடையே வீண் குழப்பத்தை தோற்றுவித்து அது நாட்டின் நிதி ஸ்திரத்தன்மையற்ற நிலைமையை ஏற்படுத்தும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை விரிவுரையாளர் கலாநிதி எம். கணேசமூர்த்தி தெரிவித்தார்.

நேர்காணலொன்றில் கலந்துகொண்டு இவ்வாறு கருத்து தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கடன் மறுசீரமைப்பு நாட்டு மக்களிடையே தற்போது பேசு பொருளாக மாறியுள்ளது. மேலும் தேசிய கடன் மறுசீரமைப்பு நாட்டின் நிதி நிலைமை உறுதிப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது.

குறிப்பாக, ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் நாட்டில் நிச்சயமற்ற தன்மை அல்லது பீதி நிலைமை ஏற்படுமாயின், அது நாட்டின் அபிவிருத்திக்கு சிறந்ததல்ல. எவ்வாறாயினும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாட்டு மக்களிடத்தில் ஏற்படும் பீதி நிலை இவ்வாறான சூழலை ஏற்படுத்தலாம். தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பிலான விடயங்களை கட்டாயமாக அரசாங்கம் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மத்திய வங்கியின் ஆளுநர் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் நாட்டு மக்களிடத்தில் பீதி ஏற்படாத வண்ணம் இருக்கவே முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர் என்பதனை எங்களால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

மேலும் நாட்டின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கடன்களை குறைக்க வேண்டும் என்பது நாணய நிதியத்தின் எதிர்பார்ப்பாகும். குறிப்பாக நாட்டின் மொத்த கடன் அளவு 83.6 பில்லியனாக காணப்படுகின்றது. அவற்றுள் 42 பில்லியன் உள்நாட்டு கடனாகும். மிகுதி வெளிநாட்டு கடன்களாகும்.

நாணய நிதியம் இந்த கடனில் 17 பில்லியனை குறைக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது. அதன் அடிப்படையில் இந்த 17 பில்லியன் ரூபாயை உள்நாட்டு கடனில் குறைப்பதா அல்லது வெளிநாட்டு கடனில் குறைப்பதா என்பது தொடர்பில் சிக்கல்கள் தோன்றியுள்ளது.

கடந்த காலங்களில் அரசாங்கங்களால் மேற்கொள்ளப்பட்ட முட்டாள்தனமான தீர்மானங்கள், பெற்றுக்கொள்ளப்பட்ட எண்ணற்ற கடன்கள், ஊழல் மற்றும் மோசடி என இவை அனைத்தையும் தற்போது நாட்டு மக்கள் செலுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, இன்று நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

ஏற்கனவே, வறுமை அவர்களின் கழுத்தை நெரிக்கும் நிலையில் தற்போது கடன் மறுசீரமைப்பு காரணமாக நிதி ஸ்திரத்தன்மையற்ற நிலை தோன்றுமாயின், மேலும் இவர்கள் பாதிக்கப்படுவார்கள். மேலும் ஆட்சியாளர்கள் செய்த தவறுகள் காரணமாக நாட்டு மக்கள் தண்டனை அனுபவிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது - என்றார். (ஐ)

# புகையிரதத் திணைக்களத்துக்கு ஒருநாளில் ரூ. ஒரு கோடி நட்டம்!

கொழும்பு, ஜுலை 03

தினமும் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட பயணிகள் ரயிலில் பயணச்சீட்டு (ரிக்கெற்) எடுக்காமல் பயணிப்பதால் புகையிரதத் திணைக்களம் நாள் ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் நஷ்டத்தை சுமக்கிறது. இதனால், பயணச்சீட்டு பரிசோதனையை கடுமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று ரயில்வே பொது மேலாளர் டபிள்யூ. டி. எஸ். குணசிங்க தெரிவித்துள்ளார்.

உத்தியோகத்தர்களுக்கான ரயில்களில் பெரும்பாலானோர் பயணச்சீட்டு இன்றி பயணம் செய்வது அவதானிக்கப்பட்டுள்ளது.

ரயிலில் பயணச் சீட்டு இல்லாமல் பயணித்தவர்களைத் தேடி கடந்த வாரம் நடத்தப்பட்ட சோதனையில் ஆயிரக்கணக்கானோர் சிக்கினர். அவர்களுக்கு மூவாயிரம் ரூபாயுடன் இரண்டு மடங்கு பயணக் கட்டணமும் அபராதமாக விதிக்கப்பட்டதாக மேலாளர் தெரிவித்தார்.

நாளொன்றுக்கு சுமார் நான்கு இலட்சம் பேர் ரயில் சேவையை பயன்படுத்துகின்றனர். புகையிரதத் திணைக்களத்திற்கு மாதாந்தம் ஆயிரம் கோடி ரூபாய் வருமானம் கிடைத்தாலும் மொத்த வருமானமும் எரிபொருள் செலவுக்கு மட்டுமே செலவிட வேண்டியுள்ளது.

இதன்படி, பேருந்து கட்டணத்தைவிட 75 சதவீதத்தால் ரயில் பயணச்சீட்டு கட்டணத்தை அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# நிவாரண உதவி பெறுவோர் பட்டியல் அடுத்த வாரமும்!

## இராஜாங்க அமைச்சர்

ஊனமுற்றோர், முதியோர் மற்றும் நோய்வாய்ப்பட்டோருக்கான நிவாரணப் பட்டியல் அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று சமூக இராஜாங்க அமைச்சர் அனுப பாஸ்குவால் தெரிவித்துள்ளார்.

இந்த நலன்புரி பட்டியல் தொடர்பில் முறையீடுகள் அல்லது முறைப்பாடுகள் எதுவும் செய்யப்படவில்லை என்றால் அதற்கு இன்னும் கால அவகாசம் இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, மேன்முறையீடுகள் தொடர்பில் திருப்தியடையாத பட்சத்தில் அதன் பிரதி ஒன்றை ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு ஜனாதிபதி தொழிற்சங்க பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார். (ஐ)

## எனக்கு...

மூன்று நாள் பயணமாக யாழ்ப்பாணம் வந்த மைத்திரிபால சிறிசேன நல்லூரில் அமைந்துள்ள சிறீ லங்கா சுதந்திர கட்சியின் யாழ். மாவட்ட பணிமனையில் நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். இதன்போது, செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்த மைத்திரிபால,

“விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரபணு பரிசோதனை தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது. நான் இறுதி யுத்த காலத்தில் இரண்டு வாரங்களுக்கு மட்டுமே பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்தேன். அதனால் எனக்கு அதைப் பற்றி எதுவும் தெரியாது. எனக்கு அதை பற்றி யாரும் எதுவும் சொல்லவில்லை.

பிரபாகரன் கொல்லப்பட்டாரா என்பது எனக்கு தெரியாது. அது மேல் மட்டத்தை சேர்ந்தவர்களுக்கே தெரியும். அவர்களே அதை கட்டுப்படுத்தினர் - என்றார்.

இதேநேரம், 2015 ஜனாதிபதி தேர்தல் காலம், அதன் பின்னரான காலத்திலும் இறுதிப் போரில் தனக்கு பெரும் பங்கு இருப்பதாக தெரிவித்து வந்தமை கவனிக்கத்தக்கது. (ஐ)

## கிளிநொச்சி

அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

4 சிசுக்களின் மரணத்திலும், தாய் ஒருவரின் கர்ப்பப்பை அகற்றப்பட்ட சம்பவத்திலும் ஒரே மருத்துவரே சம்பந்தப்பட்டுள்ளார் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டது.

இது தொடர்பில் மாவட்ட வைத்திய சாலை பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு வினவிய போது, இந்த சம்பவங்கள் பற்றிய முறைப்பாடுகள் தனக்கு கிடைத்துள்ளன என்றும், இது குறித்த ஆரம்ப புலன் விசாரணைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ)

## ‘13’ தமிழர்..

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் வேண்டாம் அதனை இந்தியா வற்புறுத்தக்கூடாது என்று வலியுறுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 21ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்கவுள்ளார். இந்த சந்திப்பின் போது தமிழர் பிரச்னைக்கான தீர்வை மோடி வலியுறுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையிலேயே, தமிழர் இனப் பிரச்னைக்கு சமஷ்டி முறையில் மாத்திரமே தீர்வு காண முடியும். அதன் அடிப்படையிலேயே பேச்சுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி வருகிறது.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் வேறு, அரசமைப்புக்கான 13ஆவது திருத்தம் வேறு. இந்தியாவின் நேரடித் தலையீட்டின் மூலம் இலங்கை - இந்திய ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது. அந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துகிறோம் என்ற பெயரில் இலங்கை அரசாங்கத்தால் ஒருதலைப்பட்சமாக தயாரிக்கப்பட்டது 13ஆம் திருத்தச் சட்டம். 13ஆவது திருத்தம் தமிழர்களை பாதிப்பதாலேயே அதனை நிராகரிக்கிறோம். மாறாக, இந்தியாவை தாம் ஒருபோதும் பகைக்கவோ அல்லது எதிர்க்கவோ இல்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் வெகுவிரைவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியா செல்லவுள்ளார். இந்த நிலையில், அதற்கு முன்பாக 13ஆவது திருத்தம் குறித்து தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியும் தமிழர் விவகாரத்தில் இந்தியா செயல்படவேண்டிய விதம் பற்றிய தமது அபிப்பிராயம் குறித்து விளக்கமளித்தும் கடிதம் ஒன்றை அனுப்பி வைக்கவுள்ளோம் - என்றும் கூறினார். (ஐ)

## பலாலி...

என்று இரத்மலானை விமான நிலையத்தின் முகாமையாளர் அருண ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த சேவை மூலம், கொழும்பில் இருந்து ஒரு மணித்தியாலமும் 10 நிமிடங்களில் யாழ்ப்பாணத்தை அடைய முடியும். இந்த விமான சேவை வாரத்தில் சனி, ஞாயிறு, செவ்வாய், வியாழன் ஆகிய நான்கு நாட்களில் காலை வேளைகளில் இடம்பெறும் என் தெரிவிக்கப்பட்டது.

12 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய செஸ்னா 208 விமானம் இந்த சேவையில் ஈடுபட்டு வருகின்றது. ஒரு வழிக்கட்டணமாக ரூ. 22 ஆயிரம் ரூபாயும் இரு வழிக்கட்டணமாக ரூ.41 ஆயிரத்து 500 அறவிடப்படும். இதில் பயணிக்கும் பயணி ஒருவர் 7 கிலோகிராம் பொதிகளைக் கொண்டு செல்ல முடியும் எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

## மின்சாரக்...

தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் பாராளுமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

அரசாங்கம் பெப்ரவரி மாதத்தில் மின்சார கட்டணத்தை அதிகரிக்கும் போது வருடாந்தம் இரு தடவைகள் அந்த விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்படும் என பகிரங்கமாக அறிவித்திருந்தோம்.

குறிப்பாக ஜூலை மாதத்தில் கட்டண திருத்தம் மேற்கொள்வோம் என தெரிவித்திருந்தோம். அதற்கிணங் கவே நாம் தற்போது மின் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

எதிர்க்கட்சியில் பலருக்கு தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இது வரை தெளிவில்லாமல் உள்ளது. அதனால் தான் ஒட்டுமொத்த எதிர்க்கட்சியும் அதனை எதிர்க்கப் போவதாக அறிவித்துள்ளது.

நெருக்கடியான காலகட்டத்தில் அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானங்களின் பிரதிபலன்களை மக்கள் தற்போது பெற்றுக்கொள்ள முடிகிறது. தேசிய கடன் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படாவிட்டால் இன்னும் சில வருடங்களில் நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொள்ள நேரும்.

அதன் போது எதிர்க்கட்சியினர் அதனை நிவர்த்தி செய்ய முன்வருவார்களா? அரசாங்கம் ஒருபோதும் வருமானத்தை அடிப்படையாக வைத்து செலவினங்கள் பற்றி சிந்திக்கவில்லை. எரிபொருள் போன்றவற்றில் மக்களுக்கு முடிந்தளவு நிவாரணங்கள் வழங்கப்பட்டன.

அத்துடன் தேசிய கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ளாமல் நாம் சர்வதேச கடன் வழங்குனர்களிடம் கடன் மறுசீரமைப்பை எவ்வாறு எதிர்பார்க்க முடியும். எமக்கு கடன் ஒத்துழைப்பை வழங்குவோர், இனியும் வழங்கவுள்ளவர்கள் அவ்வாறு நாம் செயற்பட்டால் அதனை ஏற்றுக்கொள்வார்களா என்று சிந்திக்க வேண்டும்.

மேலும் நாம் தற்போது மின்சாரக் கட்டணத்தை குறைத்துள்ளோம். இதை விட அதிகமாக எதிர்வரும் ஜனவரி மாதத்தில் குறைப்பதற்கு நடவடிக்கை எடுப்போம்.

நெருக்கடியான காலங்களிலும் அரசாங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானங்கள் தற்போது மக்களுக்கு பலன் தர ஆரம்பித்துள்ளதுள்ளது. ஜூன் மாத இறுதியில் நாடு பாரிய நெருக்கடியை எதிர்நோக்கும் என கடந்த இரு வாரங்களாக எதிர்க்கட்சியினர் தெரிவித்து வந்தனர். எனினும், அரசாங்கத்தின் சிறந்த வேலைத்திட்டங்களால் அவ்வாறு எந்த நெருக்கடியும் ஏற்படவில்லை - என்றார். (ஐ)

# யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்க செயலாளரின் கடிதத்தால் சர்ச்சை

யாழ்ப்பாணம், ஜூலை 03

யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் தனிப்பட்ட காரணங்களுக்காக மேலதிக நீதிவானுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி சங்கத்தின் சார்பில் எழுதிய கடிதத்தால் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

நிலுவையில் உள்ள வழக்கு ஒன்றை காரணம் காட்டிய அந்தக் கடிதம் அமைச்சர்கள் விஜயதாஸ ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் ஆகியோருக்கும் பிரதியிடப்பட்டமை விமர்சனத்துக்குள்ளாகியுள்ளது.

இந்தக் கடிதம் யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் அல்லது என்று அதன் தலைவர் விளக்கக் கடிதம் ஒன்றை நீதிச் சேவை ஆணைக் குழுவின் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளராக ஸ்ரனிஸ்லாஸ் செலஸ்ரின் உள்ளார்.

மோசடியாகத் தயாரிக்கப்பட்ட அற்றோனித் தத்துவம் பத்திரம் ஒன்று தொடர்பில் சட்டத்தரணி எஸ்.செலஸ்ரின் அண்மையில் யாழ்ப்பாணம் பொலிஸாரினால் விசாரணைக்கு உள் படுத்தப் படுத்தபட்டார். அந்தப் பத்திரம் தனது எழுதுநரால் தயாரிக்கப்பட்டது என்றும் தன்னிடம் ஏமாற்றி கையொப்பம் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியிருந்தார்.

சட்டத்தரணி எஸ். செலஸ்ரினின் வாக்குமூலத்துக்கு அமைய அவரது எழுதுனர் கைது செய்யப்பட்டு, ஜூன் 24ஆம் திகதி யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

ஜூன் 26ஆம் திகதி யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தை கூட்டிய செயலாளர், சட்டத்தரணி எஸ். செலஸ்ரின், யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் தொடர்பில் நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு வழங்க வேண்டும் என்று பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

எனினும் நிலுவையில் உள்ள வழக்குத் தொடர்பில் அவ்வாறு முறைப்பாடுகளை முன்வைக்க முடியாது, அது சட்டத்தரணிகள் சங்கத்தின் தார்மீகமும் கிடையாது என்று சட்டத்தரணிகள் உறுதியாகத் தெரிவித்தனர்.

எனினும் மறுநாள் ஜூன் 27ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தலைப்பில் யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் என்ற வகையில் அனுப்பப்படும் கடிதம் எனக் கூறி நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

அதன் பிரதிகள் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி, யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர், நீதி அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ரா ஜபக்ச, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர், ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தவறினால் யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் அந்த மன்றில் முன்னிலையாவை புறக்கணிப்பார்கள் என்றும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் கடிதத் தலைப்பில் செயலாளர் மட்டும் ஒப்பமிட்டு அனுப்பிய இந்தக் கடிதம் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், யாழ்ப்பாணம் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவரிடம் கேட்டிருந்தது. அத்துடன், நீதி சேவையுடன் தொடர்புடைய அலுவலர் ஒருவர் மீதான முறைப்பாட்டை முறையற்ற வகையில் அரசியல் தலைவர்களுக்கு அனுப்பியது தொடர்பிலும் கேள்வி எழுப்பப்பட்டது.

இந்த நிலையில் இந்தக் கடிதம் யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தினுடையது அல்லது என்று அதன் தலைவர், மூத்த சட்டத்தரணி எஸ்.தவபாலம் விளக்கக் கடிதம் ஒன்றை நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சட்டத்தரணிகள் சங்கத்தின் மாண்பை மீறி செயலாளர் தனிப்பட்ட காரணத்துக்காக பதவியை பயன்படுத்தியமை தொடர் பில் கடும் எதிர்ப்பை எதிர்கொண்டுள் ளார்.

## தமிழ்த்...

இந்தக் கடிதத்தை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மேலும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் முதல் தடவையாக எதிர்வரும் 21ஆம் திகதி இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்தக் கடிதத்தில், தமிழர்களின் தேசிய பிரச்னை மற்றும் அன்றாட பிரச்னைகளை மையப்படுத்தி அவற்றை தீர்ப்பதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை. அரசாங்கம் பல சந்தர்ப்பங்களில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அரசமைப்பில் காணப்படுகின்ற 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்தவில்லை. அத்துடன், மாகாண சபைகளுக்கான தேர்தலையும் ஐந்து வருடங்களுக்கும் மேலாக அரசு காலம் தாழ்த்தி வருகிறது என்ற விடயங்களும் சுட்டிக்காட்டப்படவுள்ளன.

இதேபோன்று, பௌத்த மதத்தின் பெயராலும் தொல்பொருட்களின் பெயராலும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் பொது மக்களுக்கு சொந்தமான காணிகள் மற்றும் ஏனைய வரலாற்றுப் பகுதிகள் ஆக்கிரமிக்கப்படுகின்றமை குறித்தும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமருக்கான கடிதத்தின் வரைவு பங்காளி கட்சிகளின் தலைவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடிததத்தின் இறுதி அம்சம் இந்த வாரத்துக்குள் இறுதி செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கூட்டுறவு...

தலையீட்டிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவிடமிருந்து அரசாங்கம் எவ்வாறு வெளியேறுவது என்பது பற்றி நாங்கள் இப்போது சிந்திக்கிறோம். கூட்டுறவு ஒரு பெரிய நிறுவன கட்டமைப்பில் செயல்படும் திறனைக் கொண்டுள்ளது. கூட்டுறவுத் தொழிலில் அரசு தலையிட்டால் கூட்டுறவுத் தொழிலில் அரசு இருப்பதில் எந்தப் பயனும் இல்லை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்கிறோம்.

எமக்கு தேவையான தலையீட்டை நாங்கள் முன்மொழிந்தால், அந்தத் தலையீடு கூட்டுறவு வணிகங்கள் மூலம் எப்படி நடக்க வேண்டும் என்பதை நாங்கள் முன்மொழிந்தால் இந்த திட்டத்தை முன்னோக்கி கொண்டு செல்ல முடியும் என்பது எனது புரிதல். எனவே, இது தொடர்பாக எதிர்காலத்தில் முடிவெடுப்போம் என பிரதமரும் நானும் யோசித்துக் கொண்டிருந்தோம் - என்றும் தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# ஜனாதிபதி வேட்பாளர் பஸிலே பெரமுன கட்சியினர் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 03

**சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்‌ஷவை முன்னிறுத்துமாறு சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் பொதுஜன பெரமுனவின் தலைவரிடம் வலியுறுத்தியுள்ளனர் என்று உள்ளக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**



எவ்வாறாயினும், ஜனாதிபதி தேர்தலில் பஸில் ராஜபக்‌ஷ போட்டியிட்டால் அவர் தனது அமெரிக்கக் குடியுரிமையை விலக்கிக்கொள்ள வேண்டும். எனவே, பஸில் ராஜபக்‌ஷவும் அந்த விடயத்தை தற்போது பரிசீலித்து வருகிறார் என்றும் அறிய வருகின்றது.

இதன்படி, பஸில் ராஜபக்‌ஷ தனது அமெரிக்க குடியுரிமையை துறந்து தேசியப் பட்டியல் எம்.பியாக பாராளுமன்றத்துக்கு வந்து அடுத்த ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக போட்டியிடும் வாய்ப்பு இருப்பதாக பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார் .

முன்னதாக, பொதுஜன பெரமுனவின் தேசியப் பட்டியலில் இருந்து பஸில் ராஜபக்‌ஷ பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட நிலையில், பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கடகொட தனது தேசிய பட்டியல் உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து பஸில் ராஜபக்‌ஷவுக்கு அவரின் ஆசனம் வழங்கப்பட்டது.

இந்த வருடம் பஸில் ராஜபக்‌ஷ பாராளுமன்றம் வந்தால் ஜயந்த கடகொட தனது தேசியப்பட்டியல் எம்.பி ஆசனத்தை வழங்க தயாராக இருக்கிறார் என்றும் அவர் தவிர மேலும் பல பொதுஜன பெரமுன தேசியப் பட்டியல் எம். பி.க்கள் தயாராக இருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்‌ஷ சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட மற்றும் பலம் வாய்ந்த உறுப்பினர்கள் கடந்த வாரம் பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் பல சுற்று பேச்சுகள் நடைபெற்றன. இதிலேயே மேற்படி விடயங்கள் முடிவு செய்யப்பட்டன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஒருவரை நியமிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஆனால், இந்த விடயம் தொடர்பில் பசில் ராஜபக்‌ஷ மேலதிக தகவல்கள் எதனையும் தெரிவிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தும் பேராசிரியர் ஒருவர், எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு தமது கட்சி தற்போது இரு வேட்பாளர்களை பரிசீலித்து வருகிறது என்றும் அவர்களில் ஒருவர் பொருளாதாரம் தொடர்பில் நன்கு அறிந்தவர் எனவும் மற்றையவர் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு பொறுப்பேற்கக் கூடியவர் எனவும் தெரிவித்துள்ளார்.

பேராசிரியரின் கருத்துப்படி, பொருளாதாரம் பற்றி நன்கு அறிந்தவர் என்ற வகையில் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்‌ஷவே இருக்கலாம் எனக்கட்சியின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இந்த விடயம் தொடர்பில் கட்சியில் மேலும் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருகின்றன. இதற்கமைய இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் அறியமுடிகின்றது. (ஐ)

## லிட்ரோ எரிவாயுவின் விலை நாளை முதல் குறைவடைகிறது

கொழும்பு, ஜூலை 03

லிட்ரோ சமையல் எரிவாயுவின் விலை நாளை செவ்வாய்க்கிழமை முதல் திருத்தப்படவுள்ளது.

கடந்த மாத திருத்தத்தை போன்றே எரிவாயுவின் விலை இம்முறையும் குறையும் என நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் 4ஆம் திகதி லிட்ரோ நிறுவனம் மேற்கொண்ட விலைத் திருத்தத்தின் பிரகாரம், 12.5 கிலோகிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 452 ரூபாயால் குறைக்கப்பட்டது. இதன்படி, தற்போது இதன் விலை 3,186 ரூபாயாக காணப்படுகிறது.

5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர் விலை 1,281 ரூபாயாகவும், 2.3 கிலோ கிராம் எடை கொண்ட எரிவாயு சிலிண்டரின் விலை 598 ரூபாயாகவும் உள்ளது. (ஐ)

## ஒரு இலட்சம் சுற்றுலாவிகள் இந்த மாதம் வருகை தந்தனர்

கொழும்பு, ஜூலை 03

கடந்த மாதத்துக்குள் சுமார் ஒரு இலட்சம் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடம் 6 இலட்சத்து 20 ஆயிரம் சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ கூறியுள்ளார்.

கடந்த வருடம் 7 இலட்சத்து 20 ஆயிரத்துக்கும் குறைந்த எண்ணிக்கையிலான சுற்றுலா பயணிகளே நாட்டுக்கு வருகை தந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மேலும் இரு சட்டங்களை திருத்துவதற்கு தீர்மானம்

### நிதி இராஜாங்க அமைச்சர்



கொழும்பு, ஜூலை 03

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்துக்கு சமாந்தரமாக உள்நாட்டு இறைவரிச் சட்டம் மற்றும் ஒதுக்கீட்டு சட்டங்களை திருத்த எதிர்பார்த்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எதிர்காலத்தில் அனைத்து ஓய்வூதிய நிதியங்களுக்கும் அழைப்பு விடுக்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த கலந்துரையாடல்களின் பின்னர் மாற்று யோசனைகள் இருந்தால் பரிசீலிக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

## நீர் பம்பியை திருட முயன்றவர் மக்கள் தாக்கியதில் உயிரிழப்பு

கொழும்பு, ஜூலை 03

நீர்ப்பம்பியை திருட முயன்றார் என்று கூறி மக்களால் தாக்கப்பட்டவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

அம்பாந்தோட்டை சூரியவெவ - வெலிகம பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த 27 வயது நபரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

நீர்ப்பம்பியை திருடிய ஒருவரை அந்தப் பகுதி மக்கள் பிடித்து வைத்துள்ளனர் என்று பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது. பொலிஸார் அங்கு சென்றபோது மக்களால் தாக்கப்பட்ட நிலையில் சந்தேகநபரை மீட்ட பொலிஸார் அவரை மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். அவர் அங்கு உயிரிழந்தார்.

இந்த நிலையில், அவரை தாக்கினர் என்ற சந்தேகத்தில் 23, 33 வயது நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

## 100 மி. மீற்றர் வரை இன்று மழை பெய்யும்

கொழும்பு, ஜூலை 03

நாட்டின் சில பகுதிகளில் இன்று திங்கட்கிழமை 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல், சப்ரகமுவ, வடமேல் மாகாணங்களிலும் நுவரெலியா, கண்டி மற்றும் காலி ஆகிய மாவட்டங்களிலும் இன்று 100 மில்லிமீற்றருக்கும் அதிகமான பலத்த மழை பெய்யக்கூடும் என என எதிர்வு கூறப்பட்டுள்ளது. (ஐ)

## விக்டர் சோசை அடிகளார் உட்பட மூவர் விபத்தில் காயமடைந்தனர்

மன்னார், ஜூலை 03

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி, இசைமாளத்தாழ்வு பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற விபத்தில் மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார் உள்ளடங்கலாக மூவர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

மடு திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா திருப்பலி நிறைவடைந்த நிலையில் நேற்று மாலை அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், சாரதி மற்றும் உதவியாளர் ஆகியோர் ஆலயத்திலிருந்து ஹைஏஸ் வாகனத்தில் தங்கள் இல்லத்துக்கு திரும்பினர்.

இந்த நிலையில், வேகக்கட்டுப்பாட்டை இழந்த நிலையில் ஹைஏஸ் வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்கு உள்ளானது.

இதில், அதில் பயணித்த மூவரும் காயங்களுக்கு இலக்காகினர். நோயாளர் காவு வண்டி மூலம் உடனடியாக முருங்கன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

விபத்துக்கு குறித்து முருங்கன் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

## கடன் மறுசீரமைப்பு திட்டம் இரு நாட்களில் பகிரங்கமாகும்!

கொழும்பு, ஜூலை 03

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் எதிர்வரும் இரண்டு நாட்களில் பகிரங்கப்படுத்தப்படும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான வேலைத்திட்டம் இன்று திங்கட்கிழமை அல்லது நாளை செவ்வாய்க்கிழமை மக்களுக்கு வெளிப்படுத்தப்படும் என நிதி அமைச்சின் செயலாளர் மகிந்த சிறிவர்த்தன தெரிவித்தார்.

மேலும், ஊழியர் சேமலாப நிதியம் உள்ளிட்ட தரப்பினருக்கு இந்தத் திட்டம் முன்வைக்கப்படவுள்ளது.

உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பான பிரேரணை நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் 60 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பச்சை குத்தியவர்களிடம் இருந்து குருதி தானம் பெற கட்டுப்பாடு

கொழும்பு, ஜூலை 03

உடலில் பச்சை குத்திய (டாட்டு) நபர்களிடம் இருந்து ஒரு வருட காலத்துக்குள் குருதி பெறப்படமாட்டாது என்று தேசிய குருதி மாற்று மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பச்சைக் குத்துதல் மற்றும், ஊசி ஏற்றல் முதலான செயல்பாடுகள் மூலம் எயிட்ஸ் உள்ளிட்ட 5 நோய்கள் ஏற்படக்கூடிய அபாயம் நிலவுகின்றன என்று அந்த மத்திய நிலையத்தின் பணிப்பாளர் மருத்துவர் லக்‌ஷ்மன் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

எனவே, பச்சை குத்திய காலத்தில் இருந்து ஒரு வருட காலத்துக்கு குறித்த நபர்களிடம் இருந்து குருதி பெறுக் கொள்ளப்படமாட்டாது. எவ்வாறிருப்பினும் அதற்கு பின்னரான காலப்பகுதியில் குருதியை பெற்றுக்கொள்வதில் எந்த பிரச்சினையும் காணப்படாது.

இதேநேரம் இந்த வருடத்தில், தேசிய குருதி வங்கிக்கு 4 இலட்சத்து 20 ஆயிரம் குருதி அலகுகள் தேவைப்படுகின்றன. எனினும், தற்போது போதியளவு குருதி அலகுகள் கையிருப்பில் உள்ளன என்றும் தேசிய குருதி மாற்று மத்திய நிலைத்தின் பணிப்பாளர் லக்‌ஷ்மன் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.